## இரண்டாம் கல்வெட்டு

மலையந் வினையை வென்றுனை கரிகாலசோழ ஆடையூர் நாடாழ்வாற்கும்

செங்கேணி அம்மையப்பன் அத்திமல்லனை விக்கிரம சோழ சம்புவ ராயற்கும்

இராஜாராஜதேவர் விடுகாதழகிய பெருமாளான இராஜராஜ அதிகை மானேன்

வெட்டினபடியாவது இவர்கள் எனக்கு ஒரு காலமும் தப்பாதிருக்க

னும் இவர்களுக்கு ஒரு காலமும் தப்பாதிருக்கக் கடவேனாகவும்

வர்களுக் கின்னாதார் எனக் கின்னாதார்களாகவும்

னக் கின்னாதார் இவர்களுக் கின்னாதாராகவும்

வர்கள் பகை என் பகையாகவும்

ன் பகை இவர்கள் பகையாகவும்

பாதவராயர் பக்கலும், செய்யகங்கர் பக்கலும், குலோத்துங்க சோழ சம்புவராயர் பிள்ளைகள் பக்கலும், ஆளும் ஓலையும் போகக் காட்டுதல், உறவு பண்ணுதல் செய்யாதேனாகவும்

அக . யில் நாடுமுன்பு இராஜாராஜதேவர் பொதுநின்றபடியே எங்களில் எல்லைகொல்லைகள் நிற்பதாகவும்

செ பத்தொன்றுவது ஆவணி மாதத்து செய்த நிலைமை காட்டினபடியே மற்றுமுள்ள காரியங்களும் ஒரு காலமும் தப்பாதேயிருக்கக் கடவேனாகவும்

படிக்குச் சம்மதித்தேன் விடுகாதழகிய பெருமாளேன்

என

ப்படிக்குத் தப்பினேனாகில் எனக் கின்னாதை சரிமாழ்வான் செருப்பும் எடுத்துத் தமலமும் திரைறேனேவேன்.

தம்
ருக்
ருந்
இழ
இழுப்
கூடும்.
வேண்டும்.

— ★ —

திருப்ப
'இழ குடும்பிக
தப்பட்டுள்ளன.
காலத்தில் எழுத
மூன்று புள்ளியாகத்
படிப்பதே சிறந்தது.
எனத் தோன்றுகிறது.

பாருள் ஆய்வுத்துறைக்காக டி துறையின் அச்சகத்தில் இத்துறை வெளியிடப்பெற்றது. ஆசிரியர் இயக்குநர் இரா. நாகசாமி.

# கல்வெட்டு





# கல்வெட்டு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்டு இதழ்

இதழ் 8 ★ இராட்சச ஆண்டு தைத் திங்கள் ★ விலை ரு. 1-50.




## உள்ளே ....


| | |
|---|---|
| கலியுகராமன், சேரகுலராமன், பூகலவீரன், பாஸ்கரவர்மன், மார்த்தாண்டவர்மன் ஆகிய சேரர் காசுகள் | 1 |
| திருமேனிகள், திருபரிகலங்கள் மீது எழுத்துக்கள் | 5 |
| சிவந்தெழுந்த பல்லவராயன் உலா | 9 |
| உறை கிணறு | 17 |
| சொல்லாராய்ச்சி | 20 |
| சாவாங்கல்லு | 21 |
| செப்பேட்டில் சமுதாயச் சட்டம் | 23 |
| சின்னக்குத்தூர் நடுகற்கள் | 25 |
| தமிழகத்தில் கூட்டாட்சி | 27 |
| பிடாரி கோயிலில் ஆடு பட்டபாடு | 29 |
| மாற்பிடுகு பெருங்கிணறு | 33 |


படங்கள்

இங்கே :- மதுரைப் புதுமண்டபத் தூணின் பிரதிகள்; சொர்பாலானவை; நாயக்கர் காலம்; கி.பி. 1!-ஆம் நூற்றாண்டு

முன்புறம் :- திருமலை நாயக்கர் தன் தேவியருடன்; புதுமண்டபம்; மதுரை; கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

பின்புறம் :- தெய்வானைத் திருக்கல்யாணம்; திருப்பரங்குன்றம்; ராணிமங்கம்மாள் காலம்; கி.பி. 19-ஆம் நூற்றாண்டு.


தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக அ்டி துறையின் அச்சகத்தில் இத்துறை இயக்குநரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி எம்.ஏ; பி எச்.டி.

# கலியுகராமன், சேரகுலராமன், பூதலவீரன், பாஸ்கரவர்மன், மார்த்தாண்டவர்மன் ஆகிய சேரர் காசுகள்

டாக்டர் இரா. நாகசாமி, M.A. Ph.D.

OFFICE OF THE DIRECTOR OF ... 25MAR1976 GOVT. OF MADRAS

## கலியுகராமன் காசு

திரு. டி. தேசிகாச்சாரி தமது தென்னிந்திய காசுகள் என்ற நூலில் 'கலியுகராமன்' 'பூதலவீரன்' என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ள காசுகளை பதிப்பித்திருக்கிறார். 'கலியுகராமன்' காசில் முன்புறம் இரண்டு திருவடிகள் காணப்படுகின்றன. பின்புறம் கலியுகராமன் என்ற எழுத்துக்கள் சுமார் 15-ம் நூற்றண்டு எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. (23, 24 of plate II) இதேபோல் சேரகுலராமன் என்ற எழுத்துப் பொறித்த காசுகளும் உள்ளன. (Fig 28 pl. II) இவற்றில் முன்புறம் நின்ற மனித உருவமும் ஒரு விளக்கும் காணப்படுகின்றன பின்புறம் சேரகுலராமன் என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றை தேசிகாச்சாரி அவர்கள் பாண்டியர் காசுகள் என்று குறிக்கிறார்.

"Kaliyugarāman and Chērakulsrāman point possibly to the facts as those recorded in the Srirangam inscription or to a second invasion of ceylon by the allied of the Pandyas and Cheras. But a Maravarman Thirunelveli Perurnal Vira Pandya has inscriptions of his in the Ramnad and Thirunelveli District, and the lithic records in the later district mentions coins known as those Kaliyugarāman. The coins bearing this legend have therefore to be attributed to one of the later Pandyas who probably ruled in the 15th century" (Page 16 Dravidian coins)

பாண்டியர்களது சின்னம் மீன். பெரும்பாலும் இருமீன்கள் அவர்களது காசுகளில் காணப்படும். இக்காசுகளில் மீன் சின்னம் இல்லை. ஆதலால் இவை பாண்டியர்களுடையது அல்ல என்று கொள்ளலாம் இவை பெரும்பாலும் கன்னியாகுமரி, திருநெல்வேலிப் பகுதிகளிலேயே வழக்கிலிருந்தன. கி.பி. 1487ல் பொறிக்கப்பட்ட புரவசேரி (கன்னியாகுமரி மாவட்டம் அகத்தீச்வரம் வட்டம்) கல்வெட்டில் கலியுகராமன் பணம் குறிக்கப்படுகிறது "சி பண்டாரத்தில் குடுத்த கலியுகராமன் பணம் 400" (கன்னியாகுமரி கல்வெட்டுக்கள் 1967/38) இதே பகுதியில் பறக்கை என்ற ஊரில் உள்ள கல்வெட்டு ஒன்று கி. பி. 1509ல் பொறிக்கப்பட்டது. இக்கல்வெட்டில் ஒரு நொந்தா விளக்குக்கு 400 காசுகள் கொடுத்தமை குறிக்கப்

ஆண்டிருக்கிறார்கள். இக்காசு அவர்களில் ஒருவரால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.

**மார்த்தாண்டவர்மன் காசு**

தேசிகாச்சாரி தமது நூலில் 98-வது எண் காசு ஒன்றையும் பதிப்பித்துள்ளார் இக்காசு சோழர்களது காசாக குறிக்கப்பட்டுள்ளது. காசின் முன்புறம் நின்ற மனித உருவம், பின்புறம் ஒருயானை யானையின் மேல் "மா" என்ற எழுத்து சங்கு சக்கரத்தின் இடையில் உள்ளது. யானை சேரர்களது சின்னம் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆதலின் இது சோழர் காசு அல்ல, சேரர் காசு என்பது தெளிவு. 'மா' என்ற எழுத்து யாரைக் குறிக்கும் என்பது கேள்வி. சேர மன்னர்களில் "மார்த்தாண்ட வர்மன்" என்பவர் 16-ஆம் நாற்றாண்டில் மிகவும் புகழ் வாய்ந்தவராகத் திகழ்ந்திருக்கிறார். சயதுங்கனாட்டு சங்கரநாராயண பூதலவீர சிறிவீர உதைய மார்த்தாண்டவர்மர் என இவர் கி. பி. 1532 கல்வெட்டில் குறிக்கப் பெறுகிறார் (1968/323) ஆதலின் 'மா' என்ற எழுத்து 'மார்த்தாண்டவர்மர்' என்பதின் முதல் எழுத்து. இக்காசை வெளியிட்டவர் மார்த்தண்டவர்மர் என்னும் சேர அரசர் என்பதில் ஐயமில்லை

இதுகாறும் சேர மன்னர்களின் காசுகள் சரிவர ஆராயப்படவில்லை சோழ, பாண்டிய மன்னர்களைப் போலவே சேர மன்னர்களும் காசுகள் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதும் இதனால் தெளிவாகிறது பாஸ்கர ரவிவர்மன், கலியுகராமன், சேரகுலராமன், பூதலவீரன், மார்த்தாண்ட வர்மன் ஆகிய சேரர் காசுகள் இக்கட்டுரையில் தெளிவு பெறுகின்றன.

---

சொல்லாராய்ச்சி

## தெற்றி, TERI

கல்வெட்டுகள் நிலவிற்பனையைக் குறிப்பிடும்போது நிலத்தைச் சார்ந்ததாகச் சில பொருட்களைக் குறிப்பிடுகின்றன, உதாரணமாக "தேன் படுபொதும்பும் மீன்படு பள்ளமும், மேல்நோக்கிய மரமும், கீழ்நோக்கிய கிணறும், புற்றும், தெற்றியும், மனையும் மனைப்படப்பும்" போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலே கூறியவற்றில் தெற்றி என்று ஒரு பொருள் குறிக்கப்பட்டுள்ளது. தெற்றி என்பதற்கு மேடு என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டப் பகுதியில் ஒரு சில செம்மண் மேட்டுப் பகுதிகளுக்கு Teri என்று வெளிநாட்டார் பெயர் சூட்டியிருக்கின்றனர். அப்பகுதிகளில் மிகச்சிறிய நுண் கற் கருவிகள் (Microlithic Implements) கண்டெடுக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டார் குறிப்பிட்டுள்ள Teri என்ற சொல் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வழக்கில் இருந்த தெற்றி என்ற சொல்லின் அடிப்படையில் எழுந்த சொல் என்றே தோன்றுகிறது.

நடன. காசிநாதன்

# திருமேனிகள், திருப்பரிகலங்கள் மீது எழுத்துக்கள்

—நடன. காசிநாதன், எம்.ஏ.

தமிழக மக்கள் மிக்க பழங்காலம் தொட்டே எந்த ஒரு பொருளை யும், அது என்ன பொருள், எப்பொழுது, யாரால் அளிக்கப்பெற்றது என்ற செய்திகள் அப்பொருளின் மீது பொறித்து வைக்கும் பழக்கத்தை ஒரு மரபாகக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்.

**கல்வெட்டுச் சான்று :**

தஞ்சை மாவட்டம், திருவெண்காட்டில்[1] காணப்படும் கல்வெட்டில் வில்லன் மஹாதேவியாரின் தங்கை ஒலோக சிந்தாமணியாரால் நிலை விளக்கு ஒன்று கொடையளிக்கப்பட்டது குறிக்கப்படுகிறது. அந்நிலைவிளக்கைப் பற்றிக் கூறுகையில் "இவரே குடுத்த நிலைவிளக்கு தந் பாதத்தில் எழுத்து வெட்டி தராவிளக்கு நால் முழமேய், ஐய்விரல் நீளத்தில்" என்று சொல்கிறது. அதே போன்று தஞ்சை மாவட்டம் கோயில் தேவராயன்பேட்டை யில் காணப்பெறும் கல்வெட்டு "ஈச்சொப்பிகைய் உ(1)- றினுல் பொன் தன்னில் எழுத்து வெட்டிக் கிடந்தபடி நிறை கக (19) கழஞ்சு" என்று தெரிவிக்கிறது. "வெள்ளி கொண்டு செய்த திருப்பரிகலங்களுள்ளிட்டனவும் சிவபாதசேகரனென்றும் ஸ்ரீ ராஜ ராஜனென்றும் திருநாமம் உடையன" என்று தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு கூறுகிறது[3] இவ்வாறு கல்வெட்டுகள் மூலம் அறி வதோடல்லாமல் கண்கூடாகவேப் பார்த்து மகிழும் அளவுக்குக் கடவுளர் களின் செப்புத் திருமேனிகள், திருப்பரிகலங்கள் ஆகியவற்றின் மீது எழுதப்பட்டிருப்பவை ஓரளவுக்குக் கண்டுபிடிக்கப்பட்டும உள்ளன.

**திருச்சேறை சேனைமுதலி:**

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டத்திலுள்ள திருச்சேறை, வைணவத் தலங்களுள் ஒன்றாகும் இக்கோயிலில் உள்ள சேனை முதலி செப்புத்திருமேனி பிற்காலப் பல்லவர் காலத்தைச் சார்ந்ததாகும். அத் திருமேனியின் பீடத்தில்,

> "ஸ்ரீபட்டர் நாராயண தாஸன்
> ஸேநாபதிகளயும் சுற்று மதிளும்
> எடுப்பிச்சு"

1. S. I. I. Vol. V, No. 989.
2. S. I. I. Vol. XIX, No. 236.
3. த. பெ. கோ. கல். பக்கம் 260; இரா. நாகசாமி, M.A., Ph.D.

என்று எழுதப்பட்டுள்ளது. அச்சேநாபதி திருமேனியை (செம்பினல் செய்யப்பெற்ற கடவுளர் திருவுருவங்களைத் திருமேனிகள் என்றும், மனித உருவங்களைப் பிரதிமம் என்றும் அழைப்பது பண்டைய மரபு) நாரா[illegible]ண தாசன் என்பான் செய்தளித்தான் என்ற செய்தி புலனாகி[illegible]ம் அத்தோடு அதில் காணப்படும் எழுத்தமைதி, அத்திருமேனி கி.பி 8-9[illegible] நூற்றுண்டைச் சார்ந்தது என்று அறுதியிடுவதற்கு உறுதுணை புரிகிற[illegible]

திருத்துறைப்பூண்டி அம்பாள் :

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஔஷதபுரீஸ்வரர் கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வரும் செப்புத்திருமேனிகளுள் அம்பாள் திருமேனியும் ஒன்று. இத்திருமேனி நின்ற நிலையில் உள்ளது. இரு கரங்கள். இதனுடைய பீடத்தில் ;

"ஸ்வஸ்தி ஸ்ரீ உமாபரமேஸ்வரிக்குத்
தம்பநா யடுப்பன சேதான் தேவன்
பழிப்பிலி"

என்று எழுதப்பட்டுள்ளது. எழுத்தமைதியைக் கொண்டு இத்திருமேனி கி. பி. 9-10-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது என்று கூறலாம். தேவன் பழிப்பிலியென்பவன் உமாபரமேஸ்வரி வீதிவலம் எழுந்தருளுவதற்காக இத்திருமேனியைச் செய்தான் என்று கூறப்பட்டுள்ளது.

குடமுழாவில் எழுத்து :

மேலே கூறப்பெற்றிருப்பவை இரண்டும் திருமேனிகளில் எழுதப் பெற்றிருப்பவை. இனி திருப்பரிகலங்களில் எழுதப்பெற்றிருப்பவைகளைக் காணலாம். திருத்துறைப் பூண்டியில் சோமாஸ்கந்தர் திருமேனிக்கு முன்பாக புரட்டாசி மாதம் நிறைமதி நாளன்று குடமுழா என்னும் இசைக்கருவி வாசிக்கப்படும். குடமுழா என்பது ஒருவகைப் பறை. இவ் வாத்யம் பற்றி இலக்கியங்கள் பெரிதும் வியந்து பேசுகின்றன. இங்குள்ள வாத்யம் அளவில் மிகப் பெரியதாகக் காணப்படுகிறது. இவ்வாத்யத்தின் கீழ்ப்பகுதியில்,

"ஸ்வஸ்திஸ்ரீ இக்குடவிழா சமைப்பித்
திட்டார் சிகாருடையார் மல்லாண்ட
ரான சோழகோனர்" என்றும்;

இதன் எடை "உதகாகூய (2330) பலம்" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதைக் கொண்டு இக்குடமுழா, குடவிழா என்றும் அழைக்கப்பட்டது என்றும் (தவருகவும் எழுதப் பெற்றிருக்கலாம்); சிகாரைச் சேர்ந்த மல்லாண்டார் என்னும் சோழகோனர் இதனைச் செய்தமைத்திட்டார் என்றும்; இதன் எடை 2330 பலம் என்றும்; எழுத்தமைதியைக் கொண்டு கி. பி. 12-13-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது என்றும் அறிந்து கொள்ள முடிகிறது.

### தஞ்சைப்பெருவுடையார் கோயில் கல்தொட்டிகளில் எழுத்து :

பெருமன்னன் இராசராசன் தம்மால் அளிக்கப் பெற்ற எல்லாப் பொருட்களுக்குமே ஏதாவது ஒரு பெயரினை இட்டு அழைத்தும், அதன் மீது அப்பெயரைப் பொறித்தும் வந்திருக்கிறான். எடைக் கற்களுக்கு 'ஆடவல்லான்', 'தக்ஷிணமேரு விடங்கன்' என்று பெயரிட்டும், அவை களின் மீது பொறித்தும் மகிழ்ந்திருக்கிறான். அதே போன்று காளம் என்னும் வாத்யத்துக்குக் கூட ஸ்ரீஇராஜராஜன், சிவபாதசேகரன் என்ற பெயரிட்டழைத்தும், எழுத்துக்களில் பொறித்தும் வந்திருக்கிறான். பெரிய கோயிலில் உள்ள பெரிய தேவரை நீராட்டுவதற்காக நிரப்பப்படும் நீர்த்தொட்டிகளில் கூட அவை எவ்வளவு நீர் கொள்ளத்தகுவன என்பதை யும் எழுதி வைத்திருந்தமை இன்றும் காணக்கூடிய வகையில் உள்ளன.

### காட்சியகத்தில் உள்ள கல்தொட்டி :

தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருச்சுற்றில் மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் அமைக்கப்பட்டுள்ள காட்சியகத்தில் ஒரு கல்தொட்டி வைக்கப்படுள்ளது அதில் அளவு என்ற குறியீடுகள் காணப்படுகின்றன. அவை, அத்தொட்டி 13 கலம், 1 பறை அளவு தண்ணீரைக் கொள்ளக் கூடியது என்பதைத் தெரிவிப்பதாகக் கருதலாம்.

### அம்மன் ஆலயத்தில் உள்ள கல்தொட்டி :

அதே போன்று, பெருவுடையார் கோயிலின் திருச்சுற்றில் உள்ள அம்மன் சந்நிதியிலும் ஒரு கல்தொட்டி உள்ளது அதில் சில குறியீடுகள் காணப்படுகின்றன. அவை 10 கலம் 12 மரக்கால் 7 நாழி அளவு தண்ணீர் அத்தொட்டியில் நிரப்பமுடியும் என்பதைக் குறிப்பதாகக் கொள் ளலாம். திருச்சுற்றில் உள்ள முருகன் சந்நிதியிலும் கல் தொட்டி ஒன்று இருப்பதாகவும்; அதிலும் எண்கள் பொறிக்கப் பெற்றிருப்பதாகவும் கூறப் படுகிறது.

### திருப்பரிகலங்களில் எழுத்து :

தஞ்சாவூரில் உள்ள கலைக்கூடத்தில் இரு செப்புக் கலங்கள் பாது காக்கப்பட்டு வருகின்றன. இச்செப்புக் கலங்கள் திருவெண்காட்டில் கிடைத்தவை என்று கலைக்கூடத்தின் காப்பாளர் திரு. இரத்தினசபாபதி அவர்கள் தெரிவித்தார்கள். ஒரு கலத்தில் உய்கஹ வூ என்றும் மற் றொன்றில் உய்உஹவூ என்றும் பொறிக்கப் பெற்றுள்ளன. அதாவது முதலாவதின் நிறை 21 7/8 பலம் என்றும், இரண்டாமவதின் எடை 22 7/8 பலம் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. வேறொரு இடத்தில் ஒரு செப்புப்படியில் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றிருப்பதாக அக்காப் பாளரே கூறினர். அது வெண்பா அமைப்பில் அமைந்திருக்கிறது போன்றுதெரிகிறது.

ஊதுசங்கில் எழுத்து :

வடார்க்காடு மாவட்டம் வேலூரிலிருந்து காட்பாடிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கழிஞ்சூர் சுவர்ணபுரீஸ்வரர் கோயில் திருச்சுற்றறைச் செப்பனிடுகையில் சில செப்புத் திருமேனிகளும், சில பரிகலங்களும், மூன்று ஊதுசங்குகளும் கிடைத்தன. மூன்று சங்குகளில் ஒன்றில் எழுத்துக்கள் காணப்படுகின்றன.

"ஸ்ரீ கெஞ்சூர் இறையா நீசர
முடையார்க்கு நகருடையாந்
செய்யகோவந் இட்ட சங்கு"

என்று அதில் எழுதப்பட்டுள்ளது. எழுத்தமைதி கி. பி. 10-ஆம் நூற்றாண்டைக் காட்டுகிறது. இக்குறிப்பையும், அக்கோயில் முகமண்டப விதானத்தில் காணப்படும் முதலாம் இராசராசன் கல்வெட்டில் வரும் குறிப்பையும் பார்க்கையில் இந்தச் சங்கை வழங்கிய செய்யகோவனே முதலாம் இராசராசன் காலத்தில் இக்கோயிலுக்கு இரண்டு திருநுந்தா விளக்குகளை அளித்திருக்கிறான் என்ற செய்தி புலனாகிறது. முதலாம் இராசராசனின் கல்வெட்டு,

". . . சோழ மண்டலத்து கேரளாந்தக வளநாட்டு . . ரில் நகருடையான் கா . . கோவனென் திருநுந்தா (விளக்கு) இரண்டும்" என்று உள்ளது.

அழகர் கோயில் கல் அம்மியில் எழுத்து :

மதுரைக்கு அருகில் உள்ள அழகர் கோயிலில் கல் அம்மி ஒன்று காணப்படுகிறது. அதில்,

"திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி
வாணாதராயர் உறங்காவில்லி தாஸனு
ஆன சமரகோலாகலன்"

என்று எழுதப்பட்டுள்ளது. எழுத்தமைதியைக் கொண்டு கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கூறலாம். மதுரை நாயக்கர்களுக்கு அடங்கி பணிபுரிந்த மாவலி வாணாதராய அரசர்களுள் ஒருவன் இதை அளித்திருக்கிறான் என்று கருதலாம். 4

மேலே காட்டப்பட்டுள்ளவாறு மேலும் சில திருமேனிகளும் திருப்பரிகலங்களும் தமிழ் நாட்டில் கிடைக்கக்கூடும். அவைகளையெல்லாம் சேகரித்து ஆய்வு செய்தால் செப்புத் திருமேனிகளின் காலங்களைக் கணிப்பதற்குப் பெரும் உதவிபுரிவனவாக அமையும்.

4. கல்வெட்டு Vol.4, தொல் பொருள் ஆய்வுத்துறை காலாண்டு இதழ், பக்கம் 34.

## சிவந்தெழுந்த பல்லவராயன் உலா (சென்ற இதழ் தொடர்ச்சி)

பாட விளையாத பாவாணர் தம்முடனே
கூட விளையாடும் கோமான - கூடார் 353
இருந்து களத்து சிறுதுக ளெல்லாம்
பருந்துக ளோடும் பறப்ப - பொருந்தலரை 354
அட்டானை வெம்போர் அடர்த்தானை செங்கயில்வேல்
தொட்டானைப் பூபாரம் தோள்தாங்கி - எட்டானை 355
பாரானை தாங்கவல்ல பல்லவனை வீதிதனில்
ஓரானை தாங்கி யுலாவிவர - நேராக 356
நின்றாள் விழியை நிறைத்துவளைத் தாடவரைக்
கொன்றாங் குலையிவளைக் கொன்றதுபோல் - கன்றிழந்த 357
மான்போல் வளையிழந்து வாழ்முடவன் வேட்டகொம்பு
தேன்போல நின்று திகை திகைத்தேன் - ஆன்பால் 358
முழுகோ தனநுகராள் முத்துப்பந் தாடாள்
புழுகோ தனமும் புனையாள் - செழுங்கோதை 359
பூங்குவளைத் தாரை புனைவதற்குத் தம்மிணை
ஈங்குவளைத் தாரை யிரப்பேனோ-ஓங்குதடை 360
மாத்தியா கத்தான் மணிமார் பினிலணிந்த
ஆத்தியா கத்தான் அடைந்தேனோ-நீத்தியான் 361
பார்பாகத் தான்போலப் பங்குபெறேன் என்னிலிந்த
வேம்பாகத் தான்பிறந்து விட்டேனோ-காம்பார்தோட் 362
பட்டுமழவர் திருப் பாவையிவன் தோளணையக்
கிட்டு மளவெவர்க்கும் கிட்டுமோ கிட்டுமெனில் 363
தூதனுப்பு வேனென்று தோழியரை நோக்குதலும்
மாதனுப்பெய் வாளிமதன் வந்தணுகிக்-காதனுப்பும் 364
அம்பினாற் தாக்கினான் ஆசைப் பெருஞ்சேற்றில்
குப்பினாற் தாக்கினான் கோல்வளையை-வம்பினாற் 365
பட்ட துயரனைத்தும் பாங்கியருந் தாயருங்கண்
டிட்ட வளையெங்கே யெழிலெங்கே-விட்ட 366
கலையெங்கே மானெங்கே கைக்கிளியெங் கேபாக்கு
இலையெங்கே கஸ்தூரி யெங்கே-நிலையெங்கே 367
யெல்லா மிழந்தனையோ யேழை யெனவுரைத்து
மல்லா புரியானா மன்னவனை-யெல்லாரும் 368
வந்து வயக்களிற்றிற் கண்டாற் பெறயிவற்கு
வந்து பலித்ததென்ன வாரென்பார்-அந்தரத்தி 369
லேமனோ நெஞ்சிறுத்தி யெல்லாம் பரிகொடுத்த
சேமனோ யாமென்று செப்புவாள்-சோமனொரு 370
வாதுத் திரதிசையில் வாடைக்குந் தென்றலுக்கும்
ஏதுத் திரஞ்சொல்வோம் யாமென்பார்-காதுக்குக் 371
கூறாத வார்த்தையெல்லாம் கூறிடினுஞ் செந்தமிழ்போல்
ஏறா திருப்ப திவனென்பார்-ஆறாதோ 372
மாலென்பார்க் குண்டு வழக்கென்பார் வாழ்லதிவ
னாலென்பா ராமா மாசென்பார்-பாலென்பார் 373

தண்ணீரை வேட்கத் தருமோவென் பாரெங்கள்
பெண்ணீர்மை கேட்கில் பிழையென்பார்-உண்ணீரை 374
வேட்டவர் போலே விரும்பியவர் சொன்னமொழி
கேட்டபே ரெல்லாங் கிருகிருப்ப-கோட்டுமாக் 375
கெட்டாற் குறவு கிளையினு மில்லையென
நட்டாற்றில் விட்டு நடந்தேக-ஒட்டாற்கு 376
வீரன் சிவந்தான் விசிகஞ் சொரிவன்போல்
மாரன் சொரிந்தான் மலர்க்கணைகள்-மூரி 377

## மடந்தை

அணிமகுட மன்னர் அபிஷேகஞ் சூட்டு
மணிமகுட மன்ன மடந்தை-பனிமொழியாற் 378
சொல்லுருகப் பேதம் சுகந்தக் கிளிப்புருவ
வில்லுருக்குங் காமனுக்கு மின்னுருவம்-கல்லுருக 379
மண்ணுருகக் கண்டோர் மனமுருக மற்றிவளைப்
பெண்ணுருவ மாகப் பிறப்பித்தான்-விண்ணுலகிற் 380
தாரார் திருமகளார் தாமரைப்பெண் ணுகயிவள்
சீராய் முழுப்பெண்ணுய்ச் சென்மித்தாள்-நீரார் 381
மதம்பெற்றே வீறு மதகரிபோல் மாறு
நிதம்பத்தே னூறு நிலையாள் கதம்பத்தின் 382
பூங்கச் சிறுக்கும் புணர்முலைகண் டெப்பொழுதும்
ஏங்கச் சிறுக்கும் இடையினுள்-பாங்கிற்சேர் 383
மண்சக்ர வர்த்தியெங்கள் மல்லையர்கோன் ணுகயிவள்
பெண்சக்ர வர்த்தியெனப் பேர்பெற்ருள்-இன்சக்ர 384
வாளமட்ட இக்கும் மகமேரு வைத்துளைக்கும்
தாளவட்டம போன்ற தனத்தினுள்-தாளவட்டம் 385
போதா தெனப்புலவோர் புல்கணுற்று நிற்பதனுல்
ஏதா மினியெனவங் கெண்ணவே-சூதோடு 386
பாரத்தின் கோடொத்தும் பானிப்பந் தோடொத்தும்
பூரித்தும் பாரித்தும் போகித்தும்-நேரொத்த 387
சீரொத்துப் போகச்செம் பிரக்கெம் பிரச்சங்
காரச்சிங் காரக் கனதனத்தாள்-தூரத்தே 388
பத்துத் திசையும் பகல்வத்தி போலெரிக்கும்
கொத்துச் செரிமகர குண்டலத்தாள் முத்துச் 389
சரக்காம்ப லாலும் தவத்தினரைச் செவ்வா
யரக்காம்ப லாலு மழிப்பாள்-பொரக்காந்து 390
கூராழி மாயோன் குடிபோய்க் கிடந்தபச்சை
ஓரா விலைபோ லுதரத்தாள்-மாரன் 391
தொடுத்த கரும்புக்குச் சுரும்புகா ணுக
கொடுத்தொழுகு ரோமக் கொழுந்தாள்-அடுத்து 392
சுருளும் குழறும் துவளுஞ் சொருகும் இருளும்
குருகு கருமென் குழலாள்-அருகிருந்த 393

கொண்டல் தவழுங் குளிர்நிலா முற்றத்து
வெண்டரள மேடையின்மேல் வீற்றிருந்து-வண்டுளர் 394
ஆண்கன்று தன்னெஞ்சம் அள்ளூரத் தான்வளர்த்த
மான்கன்று நாவால் வருடியிடத்-தேன்கன்ற 395
ஔவை மொழிபயிற்றும் அஞ்சுகமும் கிஞ்சுகவாய்
கொவ்வை தனைமுத்தங் கொண்டயர-செவ்வியிளம் 396
பூவை மயிலைப் புறங்கூறப் பொன்செய்மரப்
பாவை கிடந்துறங்கப் பாடினள்-காவிச் 397
செழுந்தாரு மல்லைச் சிவந்தபெருமாள்
கொழுந்தாருங் கொற்றக் குடையும்-செழுந்தாரும் 398
சென்னி குலமும் செழியர் திருமரபும்
பொன்னி நதியும் பொருனையும்-கின்னரத்தில் 399
ஏதுந் தவராம லேடியர்க்கும் சேடியர்க்கும்
கீதம் பெறநன்ருய்க் கேட்பிப்பாள்-ஓதக் 400
கடலோசை மல்லையர் காகளம்யா மோசை
மிடலோசை யெல்லா மிலங்கச் சுடரிழையுஞ் 401
சென்று ளிளமான் சிறையேகினந் தன்பீலி
பின்றுள் மடமயிலும் பின்சென்றுள்-நின்றுள் 402
பிறைமருப்புக் கிம்புரிக்கைப் பேழ்வாய் முரட்போர்
கறையடிச் செங்கட கத்தத் தறையதிர்க்கும் 403
கும்பக் கவளக் குலைத்தறுகட் சிந்தூர
கம்பக் கடகக் கடாக்களிற்றின் -செம்பதுமக் 404
கண்ணும் தமிழ்வளர்க்கும் காதும்-திருமார்பும்
தண்ணென் குவளைத் தடந்தோளும்-திண்ணென்னும் 405
செந்தா மரைக்கரமும் செவ்வாயும் வெண்ணகையும்
சந்த்ரோ தயமுகமும் தாள்மலரும்-சுந்தரமு 406
மூன்று மனத்தன் பா லோரஞ் செழுத்தோதி
மூன்று விரலிட்ட முண்டகமும்-தோன்றவே 407
கண்டசரப் பூணும் களிக்குஞ் சிரப்பூணும்
மண்டு மிருங்குழையும் வண்டிறெடு-துண்டுவிடு 408
சந்தஞ் சுகமேவு, சந்து மெனமனமும்
முந்துங் கனக முழுச்சோதி-நந்தா 409
மருவுங் கலையும் வளமா கலையும்
கருது மணிமே கலையும்-குரலில் 410
இருங்கு வளையு மிலங்கு வளையும்
மருங்கு வளையு மறந்தாள்-ஒருங்குவளைச் 411
சேய்க்கரும்பு வாணுதலாள் செங்கரும்பு போலவந்து
பேய்க்கரும்பாய் நின்று பிதற்றினள்-தீக்களிறு 412
கண்ட வளாகங் காட்டிட மால்யானை
உண்ட விளங்கனிபோல் உள்ளுடைந்தாள்-கண்டிருந்தா 413
ரீண்டிய தோழியர்கள் எல்லாருந் தென்மதுரைப்
பாண்டியன் மைந்தநம் பல்லவர்-வேண்டியிடில் 414
கான்வேட்டை யாடக் கணக்கல்லா லிங்குணக்கு
மான்வேட்டை யாட வழக்குண்டோ-தான்வேட்ட 415

நேசத்தா லிங்குவந்து நின்பார சங்கிலியின்
பாசத்தால் விசவகப் பட்டோமே-பேசத்தான் 416

வாழும் மழவர் மனுநீதி யத்தனையும்
சோழன் மருகருக்குத் தோன்ருவோ-யேழையேம் 417

வெண்மதியந் தன்மார்பில் வேந்தே யுனக்கிந்தப்
பெண்மதியைக் கோடல் பிழையன்றே-தண்மதியாற் 418

தேம்பு மடவார்க்குத் திங்கரும்பே வேம்பாயுன்
வேம்பு கரும்பாகி விட்டதே-வேம்பினல் 419

யுங்கட்கே யல்லா லொருவர்க்கு மெய்தாவோ
யெங்கட்கே தேனுமதி லெய்தாதோ-யெங்கட்குன் 420

வேம்பே யமையுமந்த வேம்பிலையென் ருலுமதன்
காம்பே யெமக்குக் கரும்பேகாண்-ஆம்பேதை 421

இந்தா திகைத்தா ளிவளொருத்தி யென்செய்வாள்
அந்தா தகித்தா ளருள்செய்வாய் வந்துலந்து 422

சேவித்தா ரெல்லவர்க்கும் செம்பொன்னே யீவதல்லால்
காவித்தா ரீவதுநாங் காணேமே தாவித்தான் 423

முன்மே ருவினிற் பொறித்தசெண்டை முற்றுமிவன்
பொன்மேரு மீதிற் பொறித்துவிட்டாய்-பின்மீள 424

யீழக் களிறுதனிற் யேறியிவள் கொங்கையெனும்
வேழக் களிற்றேற வேண்டாவோ-வாழ 425

விருந்தெனவே நின்கரத்து மீன்கண்ட வஞ்சி
யருந்ததிமீன் காண்பதென்றே வய்யா-பெருந்துயரால் 426

விண்ணி லெழும்புலிக்குன் வெம்புலியை நம்பினேம்
புண்ணிலிடுங் கோலன்றே புன்மாலை-மண்ணுலகிற் 427

கோவைக் கொடுநடக்குங் குஞ்சரமே யிங்குனக்கும்
பாவைக்கு முன்னாட்ப் பழியுண்டோ-மேவுந் 428

திருப்பாற் கடலிலந்தச் செந்திருவு நீயும்
விருப்பாற் பிறந்ததிது வேயோ-பொருப்பாய் 429

நடந்தாய் களிறே நமக்குநீ நல்கும்
யிடந்தா னிலையோவென் றேங்கி-மடந்காய்நீ 430

வாவென் றழைப்பவந்த வஞ்சிமேல் மேற்சாய்ந்து
பூவென்ற கண்ணீர் பொழிந்துநின்று-பாவி 431

கொதித்தரம் தானத்துக்கிக் கோபித்து மாரன்
துதித்தன பாரத்தைத் தொட்டுப்-பதித்து 432

கலைக்கோட்டு மாமுனிபோற் கைக்கொண்டு வந்தென்
முலைக்கோ டழுந்தமுயங் கென்ற-புலைக்கோட்டு 433

வேழம்பக் கூத்தியென வேசியைப்போ லாவென்ன
ஆழும்பர் கூத்தினல் ஆங்குரைத்து-வாழும் 434

வழுதிமா னங்காத்தவள்ளல் வடிவெல்லாம்
எழுதிமா னங்காத்தங் கிருப்ப-விழிசொருகி 435

நட்டசர மாயினள் நங்கைமேல் மன்மதவேள்
இட்டசர மாரே யெடுத்துரைப்பார்-மட்டுவிரி 436

கூந்தலார் தன்மனையிற் கொண்டேகி அச்செங்கோல்
வேந்திலார் போலிருப்ப வேறொருத்தி-பாய்ந்த 437

## அரிவை

உவரிப்போர் வென்றவனுக் கொண்டொடியார் வீசும்
கவரிப்பேர் கற்ற கரும்பு-துவரிதழ்பூங் 438
கொஞ்சு கிளியெகினம் கோகிலத்தின் பேடிளைஞோர்
தஞ்ச மதிமதுர சஞ்சீவி-விஞ்சுரதி 439
வேந்தற் கபிஷேகம் வேசியர்க்குள் மேல்வட்டம்
மாந்தர்க்குள் மோக வலைப்பாசம்-கூந்தற் 440
பிடிபோல் நடந்துவரும் பெண்ணணங்கு வஞ்சிக்
கொடிபோ லிடை நுடங்கும் கொம்பு-கடின 441
சரச வெகுமோதச் சம்போக மாருச்
சுரதவதி மோகத் துரங்கம்-விரைகமழும் 442
வெம்மை முழுநீல வேலிரண் டு கொண்டனைய
செம்மை யரிபரந்த சேல்விழிகள்-தம்மை 443
அடையரவம் போலென்ன ஆடவர்கள் அஞ்சும்
படவரவம் போல்நிதம்பப் பாவை-திடமுனிவர் 444
கன்னெஞ் சுருக்கும் கவரிதழ்மான் சிற்றிடையை
மின்னஞ் சுருக்கு மிளமுலையாள்-வன்னஞ்சேர் 445
காதலங்கல் மாலை சததளச்சந் ரோதயத்தின்
மீதிலங்கு மாநீல மேகம்போல்-பூதலத்திற் 446
மண்டல மிட்ட மலர்க்கூந்த லாள்மகரக்
குண்டல மிட்ட குழையினுள்-தண்டரளப் 447
பொன்னூச லாடப் பொழிலில் விளையாடிப்
பன்னூச புரம்பதைப்பப் பந்தாட-மின்னாரும் 448
கின்னரர் யாழினிசை கேட்டுமிகக் கொண்டாடி
முன்னிருந்த பூங்கிளியை முத்தாடி-பின்னுமெதிர் 449
செல்லு முறையாடிச் சூழ்ந்தம் மனையாடிப்
புல்லுதிரு மஞ்சனநீர்ப் புக்காடி-மெல்லியதன் 450
சந்தனச் சேறுடி தயங்குநிலைக் கண்ணாடிச்
சிந்தூரந் தீட்டும் திருநுதலாள்-சந்த்ரகலை 451
கட்டழகு நோக்கிக் கதுப்பழகுங் காதழகும்
பொட்டழகும் கண்டுடலம் பூரித்தாள்-மட்டழகு 452
மாதுக் கிசைந்தபுயன் மல்லையர்கோன் கண்டிலனேல்
ஏதுக் கிவைநமக்கென் றெண்ணியே-காதுக்குப் 453
பொன்னோலையிட்டுப் புழுக்கணிந்து பூச்சூடி
தென்னோல மிட்ட சிலம்பணிந்து-மின்னோவென் 454
றையப் படுமிடைகண் டந்தோ வெனயிரங்கிப்
பையப் பையநடந்து பட்டுடையும்-செய்யமணி 455
பூணுங்கலையும் புரிவளையுங் பொன்னினரை
ஞாணுங் கதிர்விரிப்ப நாகரி-வாணுதலார் 456
பின்னடப்பங் கட்டிவர பீலிவட்டத் தாலவட்டம்
மின்னடப்பைந் தோகையென மெல்லவந்தாள்-சன்னடரும் 457
பட்டாணி ராவுத்தப் பாப்பாரும் கப்பமிட
ஒட்டியாண தேசத்து உறுமிகளும்-கட்டாணிச் 458

சிந்துதே சத்தோரும் சிங்களதே சத்தோரும்
சந்தி கிரித்துரகத் தானிபரும்-வந்துவந்து 459
சேவிப்பத் துங்கத் திறல்விகட மல்லாரி
தாவிப்ப கற்பத்தந் தானடப்ப-தாவிச் 460
சரச மயிலன்னார் சங்கீத மேள
முரசு மொருமூன்று முழங்கக்-கரசரண 461
புண்டரிகத் தானோ புலிக்கொடியா னோகொங்கு
மண்டலத் தானோ வழுதியோ-யெண்டிசைபூ 462
பாலர் தனிலொருபூ பாலகனோ வேலனோ
கால முகிலிந்த்ராளி காவலனோ-வேலைசொறி 463
பாரேர் புகழ்கச்சிப் பல்லவனோ வென்றுகண்டோ
ராரோ வெனநின் றதிசயிப்ப-தேரோடும் 464
வீதியினற் சந்த்ரகுலன் மேருவங்கி னாரணனின்
சோதியினிற் சுந்தரஞ்சேர் தோளினான்-நீதிதரும் 465
கோழி வரோதயனங் கோனாடன் கட்டாரிச்
சாழுவ ராசன் தவராசன்-வேளிர் 466
பாராச ராச பய(ங்) காணுத் துங்கன்
வரராசன் வல்லைய ராசன்-துரைராசன் 467
மல்லை யிராச மகராசன் வாழ்வழுதிப்
பல்லவ ராசன் பவனிவர-மெல்லியலாள் 468
சந்திரகலா மாலையெனுந் தையல் முகநோக்கி
இந்திரகலா இத்த னிவனென்னை வந்தணையப் 469
பெற்றா லுயிர்பெறுவேன் பின்னையெனக் கோர்துணைவர்
மற்றாரு மில்லையவன் மார்பிலணி-பொற்றாரை 470
வாங்கித் தருவதுசன் மானமுமென் னாருயிருந்
தாங்கித் தருவதெனத் தானுரைப்பப்-பூங்கிளியும் 471
வண்டும் புறவு மடமயிலுந் தூதனுப்பிப்
பண்டுஞ் சிலமின்னார் பார்த்திருப்பார்-ஒண்டொடியே 472
நானுந் துடைகேட்கில் நன்றாமோ வென்றுரைப்பத்
தானுந் துயருந் தனிமனமு-வேனில்மத 473
வம்புங் கொடியார வலாரல்லா தூற்றும்
வம்புஞ் சுமந்துமணம் வாடினாள்-தும்பிமத 474
வேழவே யன்றொருகாற் வேலவர்க்கு வள்ளி மணம்
வாழவே பூம்புனத்திற் வந்திலையோ-சூழவே 475
இந்த்ராணி நாண எழிற்றெய்வ யானைதனை
சந்தாதியங் காணத் தந்திலையோ-செந்திருவை 476
வண்ண நெடியோன் மணம்புணர பாற்கடலிற்
பெண்ணரசி னோடும் பிறந்திலையோ-வண்ணவனைக் 477
கோற்றொடியார் கல்யாண கோலஞ் சிறந்திடநீ
யேற்றிடுவா யுண்டோமற் றில்லையோ-ஆற்றுடனே 478
தாவிக் களிறு தருபுணர்ச்சி தண்டமிழோர்
கோவை தனைப்பாடக் கொண்டிலையோ-மூவரசர் 479
பட்டமும் பல்லவர்கோன் பற்றலரை வென்றதொரு
சட்டமும் நின்னையல்லாற் தானுண்டோ-அட்டதிசை 480

தாங்கியநீ ரென்னுயிருந் தாங்கலழ கேயன்ரோ
தேங்கியநீர் கும்பத்துச் செங்கரத்தா-லோங்கியந்த 481
பொன்மேனி யெல்லாம் பொலிவித்தா யப்படர
யென்மேனி யுங்குளிர யின்னருள் தா-நின்மேனி 482
போர்த்தவரி வண்டெல்லாம் பூவையர்கள் தூதனுப்ப
ஆர்த்த வரிவண் டுடனறிவேன்-போர்த்த 483
குணமாலை வையத்துறந்த கோளைப் புரியாமல்
மணமாலை யான்சூடும் வண்ணம்-தனவாமல் 484
நின்றேற வழுதியர்கோன் நீலமலர் வாங்கிமெல்ல
ஒன்றே கரத்தினு லுய்த்திடாய்-யென்றே 485
தெரிந்துசொன்ன மாற்றம் திருச்செவியி லேற்றும்
புரிந்து சொன்ன மாரி பொழிந்து-சொரிந்ததுபோல் 486
கற்றே கடைக்கணித்தான் சந்த்ரகுலன் பல்லவர்கோன்
பெற்றே வரிவை யென்ன பேறென்றே-யற்றே 487
யிழந்த வகையெல்லாம் எடுத்தணிந்து சூட்ட
கொழுந்தரன மெல்லாங் குளிர்ந்து-செழுமவிரைப் 488
பன்னீரு மாகியெழிற் சந்தனமுங் குங்குமமும்
மூன்னீரு முன்போ லுறவாகிக்-கன்னீரும் 489
மாறினு வீதே மருந்தாக மையலுஞ்சற்
ருறினு வீங்கிருப்ப வாங்கொருத்தி-வீறினுற் 490

## தெரிவை

சங்கீத லோல சரசகுண கல்யாணச்
சிங்கார ரூப சிரோரத்னம்-வங்கார 491
மாரன் பொருகணைக்கோர் வச்ராங்கி மாரனதி
காரஞ் செலுத்தவந்த காமரதி-மாரன் 492
சரித்ரவித நாடக சாலைக் கருவூலம்
தரித்தசுர கீதசிந்தா மணிநேர்-துரைப்பிவுட்ட 493
இந்த்ராணி தேவரம்பை இந்த்ரதரு விண்கொழுந்து
சுந்த்ரோ தயபரத சட்டமபி-மந்த்ரநவ 494
கோகனக வல்லிமலர் கோதை குருபீட
மாகனக வல்லிவஜ்ர மாணிக்கம்-போகரச 495
மின்னுர் ஜயத்தம்பம் வித்துருமக் கொத்துமுத்து
பொன்னுர் கனகமணிப் பூவினுள்-அன்னுளில் 496
வண்டுவளர் சோலை சிவந்தெழுந்த மாலரிக்
கொண்டல் கொடைபோல் கொடையால்-மண்டலையில் 497
யேதிலான்முன் வுண்டான தெல்லாம் வெளிப்பட்ட
பேதைதனம் போலும் பெருந்தனத்தாள்-தீதின் 498
னுடைந்திட் டொசிந்திட் டொடிந்திட் டிசைந்திட்
டிடைந்திட் டிடுஞ்சிற் றிடையாள்-அடைந்து 499
பிறிவரிய வண்ணப் பெருந்தலையுண் டாக்கி
செறிய பொருளின் மேற் சென்று-அறிவைச் 500

செவிபோற் படைத்த சிவந்தபெரு மாள்மேல்
கவிபோற் கடைதுடித்த கண்ணுள்-புவிமாரன் 501
அன்றுதலை யிட்ட ததனைப்போ லாடவரைக்
கொன்று தலையிட்ட கூந்தலாள்-சென்று 502
விரும்பாட வந்தண் மிளிர்புன்னைக் காக்கி
வரும்பாட லந்தன்னை வைய்து-சுரும்பார் 503
அருந்தன வம்கே ளரும்பரும்ப மூரல்
முருந்தள வம்கே முகிழ்ந்து-இருந்துமெழில் 504
ஏர்வம் புலமலரு மெழிலிளம்பா லைக்குறவர்
ஆர்வம் புகமகிழ்முத் தாடியே-சேரும் 505
குரவங்குளுந்தண் கொம்புதனை யின்பங்
தரவங் கமழுநற் சாந்து-விரவம் 506
பதைத்தசோ கஞ்சண் பகநிழட் டாத்தி
யுதைத்தசோ கந்தழைய வுற்றே-இதைத்தவிரிற் 507
சும்மா தவிக்குமென சூதந் தனைநோக்கி
அம்மா தனிக்கிசைவுண் டாக்கினள்-யிம்முறையே 508
பத்துமாக் கொத்துப் பயின்றுவிளை யாடிமெழு
கொத்துமாக் கொத்து முருகினள்-சித்ரமணி 509
மண்டபத்துச் சென்று மணிச்சா ளரந்திறந்து
முண்டகத்துப் பூவரும்ப முத்தரும்ப-விண்டு 510
வருந்தி மருங்குல் வளைந்தது கண்டு
பொருந்து சிலம்பு புலம்ப-நிரந்த 511
அனங்க சரங்கண் ணுறங்க யிரண்டு
தனங்க ளசைந்து ததும்ப-இனங்கள் 512
மயங்கி மயங்கி மருண்டு தியங்கி
நயங்கள் வயங்க நடந்தாள்-செயங்கொள் 513
வழுதியர்கோ னெங்கோன் வடிவமெல்லாம் நன்றாய்
எழுதியாங் கோர்பா விருப்ப-தொழுது 514
விழிக்கு விருந்திட்டு மெய்தழுவி யாசை
ஒழிக்கும் வகைமுத்தோ டொத்தி-செழியனவன் 515
தோளாம் வடவரைமேல் தொடிகொடி மீனனைய
வாளா விழியிணைக்கு மையெழுதி தாளான 516
திங்க ளெனவே சிறக்கும் சிவந்தெழுந்தான்
தங்கள் மரபு தனைவிளக்கித் துங்கமுடன் 517
யேறிப் பொருத யிகல்வேழ மாமுலைக்கிச்
சேறிப்புச் சந்தத் திரளணிந்து-சூரைகொள்ளும் 518
சங்கும் பினறயும் சரியா மிரண்டினுக்குப்
பொங்கு நலச்சாந்துப் பொட்டணிந்து-செங்கையினிற் 519
தீட்டுஞ் சமமென்னுஞ் செங்கோல் திராசினுக்கும்
பூட்டுஞ் சிலம்புலம்பப் பூட்டினள்-நீட்டிமுன்னுள் 520
கையாற் தலையிட்டு காத்தளித்த மேகமெனும்
மையாற் குழற்கு மலர்புனைந்தாள் 521

(அடுத்த இதழில் தொடரும்)

# உறை கிணறு

கி. ஸ்ரீதரன், M. A;
அகழ்வாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

மனிதனுக்கு உபயோகப்படக்கூடிய நீர் நிலைகளுள் கிணறும் ஒன்று. திருவள்ளுவர் இதை கல்வி அறிவிற்கு ஒப்பிடுகிறார்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

கிணற்றை கேணி என்றும் அழைப்பதுண்டு. கிணறுகள் ஆழிக் கிணறு (கடல் அருகில் உள்ள கிணறு), கூவம் (ஒழுங்கிலமையாத கிணறு), நடை கேணி (படிக்கட்டுக்கள் உடைய கிணறு), தொடு கிணறு (ஆற்றில் நீர் (வரத் தோண்டுவது), பிள்ளைக் கிணறு (ஏரியின் நடுவில் உள்ள கிணறு), பூட்டைக் கிணறு (கமலை நீர் பாய்ச்சும் அமைப்புடைய கிணறு) முதலிய வகைகள் உள்ளன.[1]

தமிழகத்தில் கிணறுகள் தோண்டப்பட்டதையும், கிணற்றிலிருந்து நீர் எடுத்தலைப்பற்றியும் சங்க இலக்கியங்களான பெரும்பாணாற்றுப் படையும், அகநானூறும் கூறுகின்றன.

கல்லறுத்து இயற்றிய வல் உவர்ப்படுவிள்,
பார் உடை மருங்கின் ஊறல் மண்டிய
வன் புலம் துமியப் போகி

-அகம் 79-3-4

குறுங்காழ்உலக்கை யோச்சி நெடுங்கிணற்று
வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி

-பெரும்பாணாற்றுப்படை 97-98

இந்தியாவில் நடைபெற்ற அகழ்வாய்வில் பல இடங்களில் உறை கிணறுகள் கிடைத்துள்ளன தமிழகத்தில் கொற்கை, காஞ்சிபுரம், நந்தன் மேடு[2] (கும்பகோணம் அருகில்), காவேரிப்பூம்பட்டினம்,[3] வசவசமுத்திரம், அரிக்கமேடு[4] ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் உறை கிணறுகள் கிடைத்துள்ளன. உறை கிணறுகளின் வளையங்கள் சுடு மண்ணால் செய்யப்பட்டவை.

---

கையாண்ட நூல்கள்:

1. கல்வெட்டு-சா. கணேசன் பக்கம்-205
2. Indian Archaeology-A Review 1961-62
3. -do- 1963-64, 64-65, 65-66
4. Ancient India No 2

பாண்டிச்சேரி அருகில் உள்ள அரிக்கமேடு என்னும் இடத்தில் நடைபெற்ற அகழ்வாய்வில் இரண்டு உறை கிணறுகள் செங்கற்களால் கட்டப் பெற்ற தொட்டிக்கு அருகில் உள்ள அமைப்புடன் கிடைத்தன. அவைகள் துணிகளைச் சாயம் ஏற்றுவதற்கு உபயோகப்பட்டிருக்கலாம்.



கொற்கை அகழ்வாய்வில் நான்காம் குழியில்
கட்டடப் பகுதியின்கீழ் காணப்பட்ட உறைகிணறு.

செங்கற்பட்டு மாவட்டத்தில் வசவசமுத்திரம் என்ற இடத்தில் நடைபெற்ற அகழ்வாய்வில் மேலே கூறப்பட்ட அமைப்புகள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால் செங்கல் தொட்டியும், குழாய்களும் நிலச் சொந்தக்காரர்களால் தோண்டப்பட்டு உடைக்கப்பட்டிருந்தன. அரிக்க மேட்டில் கிடைக்கப் பெற்றிருந்த உறை கிணற்று வளையத்தின் மேற்புற விட்ட அளவு கீழ்ப்புறத்தை விட அதிகமாக இருந்தது. ஆனால் வசவ சமுத்திர உறை கிணற்றின் மேல் பகுதியின் விட்ட அளவு கீழ்ப்பகுதியை

விடக் குறைவாக இருந்தது. அதனால் ஒரு வளையத்தின் மேல் இன்னொரு வளையம் வைக்கும் பொழுது, மேலே வைக்கப்படும் வளையத்தின் கீழ்ப்புற விட்ட அளவு அதிகமாக இருப்பதால் அது கீழே உள்ள வளையத்தில் நன்றாகச் செருகிக்கொள்ளும். மேலும் அதனால் ஒவ்வொரு வளையத்திற்கும் இடையில் இணைப்புப் பூச்சு ஒன்றும் தேவைப்படவில்லை.

வசவசமுத்திர உறை கிணற்று அமைப்பு உறை கிணறுகளை எவ்விதம் அமைப்பது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. முதலில் ஒரு உறை கிணற்று வளையத்தை எங்கு கிணறு தோண்ட வேண்டுமோ அங்கு வைப்பார்கள். பின்பு அவ்வளையத்திற்கு உட்பட்ட இடத்திலுள்ள மண்ணைத் தோண்டி எடுத்துவிட வேண்டும். இதனால் அவ்வளையம் கீழே இறங்கும். பிறகு அதற்குமேல் இன்னொரு வளையத்தை வைத்து முன்பு போல் நடுப்பகுதியில் தோண்ட வேண்டும். இம்முறையில் எவ்வளவு ஆழம் வேண்டுமோ அவ்வளவு ஆழம் வரை தோண்ட வேண்டும். இம் முறை பொதுவாக கடற்கரை ஓரங்கள் மற்றும் மணற்பாங்கான பகுதி களில் நடைபெற்று வருவதாகும். இம்முறையில் விரைவாகவும், அதிக செலவில்லாமலும், பக்கச் சுவர்கள் சரியாமலும் கிணற்றினை அமைக் கலாம்.

கொற்கை அகழ்வாய்வு நான்காவது (KRK-4) குழியில் கிழக்கு மேற்காக அமைந்த ஒரு செங்கற் கட்டிடம் வடக்கே படிகளுடன் இருப்பது கண்டு பிடிக்கப் பட்டது. இந்த கட்டிடம் 2 வரிசைகள் கொண்ட 9 அடுக்கு வரிசைகளுடன் கட்டப்பட்டுள்ளது. கட்டிடத்தின் கீழே மூன்று பெரிய அளவினையுடைய சுடுமண் உறைகள் ஒன்றன்மீது ஒன்றாக வைக்கப்பட்டி ருந்தன. உறைகளுக்கு மேலே செங்கற்கட்டிடம் இருப்பதால் உறைக்குள் இருப்பது என்ன என்று தீர்மானிக்க இயலவில்லை. உடைந்த பானை ஓடுகள், சங்குகள், மணற்பாறைகள் ஆகியவற்றைக் கொண்டு உறையின் பக்கங்களை நிரப்பியுள்ளனர். செங்கற் கட்டிடமும், உறைகளும் ஒரே காலத்தைச் சார்ந்தவையாக உள்ளன, ஆயினும் அதைக் கட்டியதின் நோக்கம் தெரியவில்லை.[5]

இத்தகைய உறைகிணறுகள் தமிழகத்தில் இருந்தன என்பதை 'உறைக் கிணற்றுப் புறச்சேரி' என்று வரும் பட்டினப்பாலைத் தொடரால் அறியலாம்.[6] இன்றும் இத்தகைய அமைப்பு உள்ள கிணறுகளை கடற் கரை ஓரமாக உள்ள பகுதிகளில் காணலாம். ஆகவே சங்க காலத்திலி ருந்தே உறை கிணறுகளை அமைக்கும் பழக்கம் தமிழகத்தில் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது என்பதை உணரலாம்.

5. தமிழகம்; தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு; டிசம்பர் 1970.
6. பட்டினப்பாலை-27

சொல்லாராய்ச்சி

# அறவன் மறவன் குறவன்

சென்ற இதழில் மழவன், இழவன், உழவன் என்ற சொற்கள் எதிலிருந்து தோன்றியிருக்கலாம் எனக் குறித்திருந்தேன்

மழு — மழவன்
உழு — உழவன்
இழு — இழவன் (பின்னர் ஈழவன்) என.

அதேபோல் அறவன், மறவன், குறவன் ஆகிய சொற்களும் தோன்றியிருக்கலாம் என எண்ண இடமிருக்கிறது.


அறவன் - அறு, தீர்த்தல், அறுதியிட்டுக் கூறுதல் என்பதிலிருந்து தோன்றியிருக்கலாம் என லெக்சிகன் கூறுகிறது. அதுபோல

மறவன்:- 'மறு'விலிருந்து தோன்றியிருக்கக்கூடும். மறு-தடுத்தல் (தமிழ் லெக்சிகன்) மாற்ருரைத் தடுத்து நிறுத்தும் வீரன் என்னும் பொருளில் வந்திருக்கக்கூடும். அதேபோல்

குறவன்:- 'குறு' என்பதிலிருந்து வந்திருக்கக்கூடும். குறு-குறுகுதல்-குள்ளமாயிருப்போர், வலைவைத்தல், பாம்பு பிடித்தல் முதலியவற்றுக்காக ஒளிந்து குறுகி செல்லும் இயல்பினர் என்னும் பொருளில் குறவன் வந்திருக்கலாம்.

## கிழவன்

கிழவன் என்ற சொல் கெழு என்னும் சொல்லிலிருந்து தோன்றியிருக்கக்கூடும். கெழு-முழுமை, வளமை, நிறைவு, முதிர்வு என்ற பொருளில்வரும் தமிழ் லெக்சிகன். ஆதலின் உழு-உழவன் என்பது போல் கெழு-கெழவன் என்று தோன்றியிருக்கக்கூடும். கெழவன் என்ற சொல்லே கிழவன் ஆகியிருக்கக்கூடும். — ஆசிரியர்



'விக்ரம பாண்டியன்' என்னும் பெயருள்ள காசு

# சாவாங்கல்லு

மா. சந்திரமூர்த்தி, எம். ஏ.,
பதிவு அலுவலர்

மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் சோழவந்தான் அருகில் தென்கரை கிராமத்தில் ஸ்ரீமூலநாத சுவாமி கோயில் உள்ளது. இக்கோயில் கோபுரத்தின் முன்பு ஒரு வீரனின் அழகிய கற்சிலை ஒன்று காணப்படுகிறது. இவ்வுருவம் கிழக்கு பார்த்த நிலையில் முழங்கால் வரை புதையுண்டு உள்ளது.

இச்சிற்பத்தில் காணும் வீரன் இடது கையால் தனது முடியைப் பிடித்துக் கொண்டு, வலது கையில் ஏந்தியுள்ள நீண்ட கத்தியால் தன் கழுத்தைத் தானே அரிந்து கொள்கிறான். இவ்வீரனின் கழுத்தில் முத்து மாலையும், மலர் மாலையும் திகழ்கின்றன. வீரனின் முன் கையிலும், தோளிலும் வளையல்களும், இடையில் விசிறி மடிப்புடன் கூடிய ஆடையும் அணிசெய்கின்றன.

இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ள கல்லின் விளிம்பில் இரண்டு வரிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 (உ)ள்ளிட்ட வேண்டுந் நிவந்தங்களுக்கு இறுப்பதாக விட்(ட)


2 ஒரு மாவரையே அரைக்காணியும் ஸ்ரீ கோயி . . .

இக்கல்வெட்டு கோயிலுக்கு ஒரு மாவரையே அரைக்காணி நிலம் நிவந்தமாக அளிக்கப்பட்ட செய்தியைக் குறிக்கிறது. இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு கி. பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கணிக்கலாம். சிற்பத்தின் உருவமைதியைக் கொண்டு கி. பி. 13-14-ஆம் நூற்றாண்டாக அறியமுடிகிறது. எனவே கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள ஒரு சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வீரனின் சிலை வடிக்கப்பட்டதாக அறிகிறோம். மேலும் கல்வெட்டு கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலக் கொடையைக் குறிப்பதால், கல்வெட்டுச் செய்திக்கும் சிற்பத்திற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழகத்தில் திருவான்மூரில் கிடைத்த கம்பவர்மன் கால நடுகல் ஒன்று வீரனொருவன் தன் விரதம் முடிந்ததின் நினைவாகப் படாரிக்கு நவகண்டங் குடுத்து தன்தலை அறுத்துப் பீடலிகை மேல் வைத்தானுக்கு ஊரார் நிலக்கொடை அளித்ததைக் குறிக்கிறது.

பாண்டிய நாட்டில் குன்றக்குடி திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் கொற்றவை முன் தன் தலையை அரிந்து கொடுக்கும் வீரனின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஆனால் தென்கரைச் சிற்பம் கொற்றவையின்றித் தனித்துக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வழகிய உருவம் இப்பகுதி மக்களால் 'சாவாங்கல்லு' என அழைக்கப்படுகிறது. பொதுவாகப் போரில் மாண்டுபட்ட வீரர்களுக்காக எடுக்கப்படும் நடுகற்கள் 'வீரக்கல்', 'சிறைமீட்டான் கல்', 'பட்டான் கல்', 'பட்டவன் கல்', 'வேடங்கல்', 'வேடியப்பன் கல்' என அழைக்கப்படுவது உண்டு. ஆனால் நாட்டின் நன்மையைக் கருதித் தன் தலையைத் தானே அரிந்து கொண்டு சாகும் வீரனுக்கு எடுத்த கல்லைச் 'சாவாங்கல்லு' என அழைப்பது அழகாகவும் பொருத்தமாகவும் இருக்கிறது. இது இலக்கியத்தில் இல்லை; மக்கள் வழக்கில் இருக்கிறது என்பது மற்றொரு சிறப்பாகும். இவ்வுருவத்தைக் காஞ்சிபுரத்து முதலியார்கள் ஆண்டுக்கொருமுறை வழிபாடு செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.



கீழைச் சாளுக்கிய மன்னன் மூன்றாம் விசயாதித்தனின் சாத்தலூர் செப்பேடுகள்

பண்டைய சமுதாயத்தில் தொழில் கட்டுப்பாடு இருந்தது. யார், யார் எந்தத் தொழிலை எவ்வாறு செய்தல் வேண்டும் என விதிமுறைகள் இருந்தன. இவற்றை மனுவின் தர்மசாத்திரம் போன்ற நீதி நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இது ஒருவகை செயற்கை வரம்பு ஆதலின் அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் தோன்றின. இவ்வரம்புகளால் பாதிக்கப்பட்டவர்கள் உரிமைக் குரல் கொடுத்திருக்கின்றனர். ஆதலின்

# செப்பேட்டில் சமுதாயச் சட்டம்

டாக்டர் இரா. நாகசாமி, M.A., Ph.D.

அவ்வப்பொழுது அவரவர்களது தொழில் உரிமைகள் என்ன என விவாதித்து காலப் போக்கிற்கேற்ப வரையறுத்துக் கல்வெட்டில் பொறித்து வைத்துள்ளனர். இதுபோன்ற தொழில் முறைகளை குறிக்கும் கல்வெட்டுகள் சில கிடைத்துள்ளன. இத்தகைய சமுதாயக் கட்டுப்பாடுகளை நாடும் நகரமும் கூடி முடிவெடுத்தன என அறிகிறோம். இதுபோன்ற சமுதாயச் சட்டங்களைச் செப்பேடுகளில் பொறித்தும் வைத்திருந்தனர். வழக்கு ஏற்படும்போதெல்லாம் செப்பேட்டை மூலாதாரமாகக் கொண்டு முடிவு எடுத்தனர் என்று அறிகிறோம். திருக்கோயிலூரில் உள்ள ஒரு சோழர் காலக் கல்வெட்டு இதை எடுத்துக் காட்டுகிறது.

> 1 "ஸ்ரீமத் பூமிதேவி புத்ரஸ்ய சாதுர்வண்ண குலோத்பவம் சர்வலோகஹிதார்த்தாய சித்ரமேளஸ்ய சாஸனம்
>
> திரிபுவனச் சக்ரவர்த்தி ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு அஞ்சாவது நாடும் நகரமும் கூடி இருந்து காஞ்சிமாநகரில் செப்பேட்டுப்படி செக்கார் செய்யக் கடவ முறைமை எண்ணை . . . .
>
> 2 வைபிலே கூறி விற்க கடவந் இவனுக்கு உகச்சும் பறையும் கொட்டக் கடவதல்லன் ஒரு துறையில் நீருண்ணக் கடவனல்லன் தன் மனையில் சேந்த வடக்கு திருவாசலுக்குப் புறம்பே . . . . துக்கு குடுக்ககடவ . . . . தல்லந் வாஸ்துவுக்கும் . . . வெற்றிலையும் . . . . விற்க கடவன் எண்ணை விற்கு மல்லாதும் . . . . கடவன்.
>
> —865 of S. I. I. Vol. VII

இதில் செக்கு வணிகர் எண்ணை விற்கும் உரிமை பெற்றுள்ளனர். இதை விலை கூறி விற்பது எப்படி என்றுள்ள பகுதி சிதைந்துள்ளது. இவர்க

ளுக்கு நன்மை தீமைக்கு உவச்சு, பறை கொட்டிக் கொள்ள உரிமை இல்லை நீர் எடுத்துக்கொள்வதற்கும் சில தடை இருந்தது. தன் மனைக்கு வடக்கே செல்லவும் தடை போலும்! எண்ணெ விற்பது மட்டுமின்றி வேறு சில விற்பதற்கும் உரிமை பெற்றனர்.

இந்த முறைப்படி இக்கோயிலுக்கு அமர்த்தப்பட்ட செக்கார் நடக்கவேண்டும் என விதிக்கப்பட்டது போலும்!

இக்கல்வெட்டின் தொடக்கம் சித்ரமேழி சாஸநம் என்று கூறுகிறது. பண்டைய சமுதாயத்தில் உழுதுடி வணிகர், பிற வணிகர் ஆகியோர் தமக்கென அமைத்துக் கொண்ட ஒரு சமுதாயக் குழுவுக்குச் சித்ரமேழி நாடு, என்ற பெயர் இருந்தது. இது எண்ணெ வணிகரின் முறையை அறுதியிட்டுக் கூறுவதால் சித்ர மேழி நாட்டாரின் சாஸநமாயிற்று.



சேயுனைச் செல்வி;
பல்லவனீச்சுரம்,
காவிரிப்பூம்பட்டினம்;
கி.பி. 9-ஆம்
நூற்றாண்டு.

# சின்னக்குத்தூர் நடுகற்கள்

நடன. காசிநாதன், எம்.ஏ.
பதிவு அலுவலர்

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம் சின்னக்குத்தூர் என்ற சிற்றூரிலிருந்து தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மூன்று நடுகற்களைக் கண்டுபிடித்துள்ளது[1] இம்மூன்று கல்வெட்டுகளில் இரண்டு கல்வெட்டுகள் முழுமையாக உள்ளன. ஒன்று சிதைந்து உள்ளது இம் மூன்றும் 'தருமபுரி கல்வெட்டுகள்' என்ற நூலில் 1973/112, 143, 144 என்ற எண்களாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.[2] இக்கல்வெட்டுகள், எந்த மன்னனின் காலத்தில் பொறிக்கப்பட்டவை என்பதையும், எந்தக் காலத்தைச் சார்ந்தவை என்பதையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்வெட்டு 1. (1973/112)

1. திரிபுவனமல்ல பூராதிராயன் அத்திம
2. ல்லன் முதலிகளில் தாமந்த[த]
3. வற்படியார் மகன் மாராழ்வ
4. ரன் நாரசிங்க தேவநு[க்]
5. கு படைத்துணை போய் பட்டான்

கல்வெட்டு-2. (1973/113)

1. முரசர் காமுண்ட . .
2. செல்வநாயகன் [அ]
3. [க]த்தமல்லன் பட்ட
4. ப் பூசலில் பட்டான்

கல்வெட்டு-3 (1973/144)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ பூரா
2. த்தாழ்வார் செலவாண்டை
3. மேலே எடுத்து பொத்தாம
4. ரை திறைமேலே விட்டு பூசல் (செ)
5. யைசிலே சோமையர் நாய
6. க மகன் வடிவமைய நாயக(ன்)
7. தம்பியும் மகநும் பட்டார்

மேலே கொடுக்கப்பட்டுள்ள மூன்று கல்வெட்டுகளில் ஒரு கல்வெட்டில் மட்டும் மன்னனின் பெயர் அத்திமல்லன் என்று குறிக்கப் பட்டுள்ளது. இவ்வத்திமல்லன் யாராக இருக்கக்கூடும்.

### அத்திமல்லன் யார்?

கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதிக்கு ஹஸ்திமல்லன் என்று ஒரு பட்டம் இருந்திருக்கிறது.[3] அவன் முதல் பராந்தக சோழனின் சிற்றரசர்களில் ஒருவனாக இருந்தவன் இவன், பாணர்களைப் பராந்தகன் வெல்லுவதற்கு உறுதுணை புரிந்திருக்கிறான். ஆதலால் பராந்தகன் ஹஸ்திமல்லனுக்குப் 'பாணாதிராஜன்' என்ற பட்டத்தை அளித்திருக்கிறான்.[4] ஆகவே இந்த ஹஸ்திமல்லன்தான் இக்கல்வெட்டில் காணப்பெறும் அத்திமல்லனாக இருத்தல் வேண்டும். அத்தோடு இக்கல்வெட்டில் காணப் பெறும் எழுத்தமைதியும் இதற்கு உறுதுணை புரிவதாக அமைந்துள்ளது. கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டும், பராந்தகனின் கீழ் அடங்கிய சிற்றரசன் என்பதாலும் கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இக் கல்வெட்டைக் கூறலாம்.

### தனி ஆட்சி

கல்வெட்டு 1-இல் 'திரிபுவனமல்லபூராதிராயன் அத்திமல்லன்' என்று இம்மன்னன் தன்னைப் பாராட்டிக் கூறிக்கொள்வதால் இவன் ஒரு சில ஆண்டுகளேனும் தனித்த ஆட்சி புரிந்திருக்கவேண்டும் என்று நம்பலாம்.

### பூராத்தாழ்வார்

கல்வெட்டு 3-விலுள்ள பூராத்தாழ்வார், கல்வெட்டு 1-ல் குறிக்கப் பட்டுள்ள பூராதிராயனையே குறிப்பதாக இருத்தல் கூடும். அவ்வாறெனில் அதுவும் அத்திமல்லனையே குறிப்பதாகும். ஆகவே கல்வெட்டு-3ம் அத்திமல்லன் காலத்தில் பொறிக்கப்பட்டது என்று துணிந்து கூறலாம்.

கல்வெட்டு-2ன் எழுத்தமைதியும் கல்வெட்டு 1, 3 ஆகியவற்றின் எழுத்தமைதியும் ஒன்றாகக் காணப்படுவதால் கல்வெட்டு-2ம் அத்திமல்லன் காலத்தைச் சேர்ந்ததாக இருத்தல் கூடும்.

---

1 திரு ச. ஹரிஹரன், பதிவு அலுவலர் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.
2. தருமபுரி நடுகற்கள், பொறுப்பாசிரியர் இரா. நாகசாமி, எம். ஏ, பிஎச். டி.
3. A. R. E 1896, Part II, para 8.
4 Colas K. A. Nilakanta Sastri, P. 126. Ed. 1955.

## 13-ஆம் நூற்றாண்டில்

# தமிழகத்தில் கூட்டாட்சி

பாண்டியப் பேரரசர்களில் மிகவும் புகழ்வாய்ந்தவன் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தமிழகம் முழுவதையும் தன் குடைக்கீழ் ஆண்ட ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் என்பவன். கி.பி. 1251-இல் பட்டத்துக்கு வந்த இம்மன்னன் கி.பி. 1269 வரையில் ஆண்டான் என்பர். சேரனையும், சோழனையும், போசள மன்னனையும், காடவன் கோப்பெருஞ்சிங்கன் என்பவனையும் கண்டகோபாலனையும் வென்ற இம்மன்னனது ஆற்றலுக்கு ஈடே இல்லை. இவனுக்கு எல்லாந்தலையானான் என்ற ஒரு பட்டமும் உண்டு. இம்மாபெரும் வலிமை மிகுந்த மன்னனுக்கு உறுதுணையாக விக்ரமபாண்டியன், வீரபாண்டியன் என இரு பாண்டியர் இருந்தனர். சுந்தரபாண்டியன் தானே தலைவனாக இருந்தபோதிலும் விக்ரமபாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்கும் தன்னுடன் **'உடன் ஆளும்'** ஆட்சிப் பொறுப்பை அளித்திருந்தான் என்று ஒரு கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

கல்வெட்டு திருவேந்திபுரத்தில் உள்ளது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியனது கல்வெட்டு 'கோச்சடையபன்மர் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டியதேவர்க்கு யாண்டு 10-வது' எனத்தொடங்குகிறது. சோழகுலவல்லி நல்லூர் ஊரார் செய்த முடிவைக் கல்வெட்டு கூறுகிறது. வில்லவராயர் என்று ஒருவர் அவ்வூர் சிவன்கோயிலுக்கும், பெருமாள் கோயிலுக்கும், ஒரு மடத்துக்கும் சில நிலங்களை அளித்தார். அந்நிலங்கள் பல ஊர்களில் இருந்தன. இவற்றை இறையிலி நிலமாக்க ஊரார் முடிவெடுத்தனர். இதற்கு அன்று ஆளும் அரசனின் அனுமதி தேவை. அன்று ஆளும் அரசனின் பெயரைக் குறிக்கும் இடத்தில் கல்வெட்டு மூன்று அரசர்களின் பெயரையும் 'பெருமாள் சுந்தரபாண்டிய தேவர், பெருமாள் விக்ரமபாண்டியதேவர், பெருமாள் வீரபாண்டியதேவர் எழுதின திருமுகப்படி' என்று குறிக்கிறது. ஆளுகின்ற அரசன் சுந்தரபாண்டியன். திருமுகம் (ஆணை) எழுதியவர்கள் சுந்தரபாண்டியனோடு விக்ரமபாண்டியனும், வீரபாண்டியனும் என்று பார்க்கும்போது மூவரும் கூட்டாக ஆட்சி புரிந்தனர் என்று தெளியலாம்.

**கல்வெட்டின் பகுதி**


" திருவிளக்குப் புறமாகவும், திருமாலைப்புறமாகவும் மடப்புறமாகவும் . . . . அகரப்பற்றுகவும் பெருமாள் சுந்தரபாண்டியதேவர் பெருமாள் விக்ரமபாண்டியதேவர், பெருமாள் வீரபாண்டிய தேவர் எழுதின திருமுகப்படி நன்செய் புன்செய் நிலங்களும், ஊர் இறையிலியாக நம் நியோகப்படி எழுதின நிலங்களும்

இந்த பத்தாவது ஆடி மாதம் விரையாக அனுபவித்துப் போது கிற நிலங்கள் கை ஓலைப்படி நிலங்கள் உடையார் வில்லவராயர் நம்மலில் ஒருத்தராய் இத்தன்மங்கள் செய்தபடியாலே நாமே சந்திராதித்தவரை நடத்திக் குடுக்க கடவோமாகவும்"

என்று கல்வெட்டில் காணப்படுகிறது. பாண்டியர்கள் பஞ்ச பாண்டியர் என்று அழைக்கப்பெறும் மரபு உண்டு. இவர்கள் பலர் சேர்ந்து ஒருங்கே ஆண்டனர் என்று ஆசிரியர் குறிப்பர். இக்கல்வெட்டில் பாண்டியர்களில் தலைசிறந்த மன்னன் அவ்வாறு ஆண்டிருக்கிறான் என்று அறிய இக் கல்வெட்டு உதவுகிறது.

—761 of S. I. I. Vol. VII

---



தந்தச் சிற்பம் திருவரங்கம். திருமலை நாயக்கர் காலம், கி. பி 17 ஆம் நூற்றாண்டு

# பிடாரி கோயிலில் ஆடு பட்டபாடு

**ச. செங்கல்வராயன்**
*( அச்சுப்பிழை திருத்துபவர் )*

அண்ணன் ஒரு பகுதியை ஆண்டான். அவன் தம்பி அண்ணன் ஆணைப்படி நடந்து வந்தான். ஆனால் தம்பியின் மக்கள் மூவர் மாற்றானுடன் போய்ச் சேர்ந்து கொண்டார்கள். அதனால் நாட்டாரும் பல ஊர் பிரதிநிதிகளும், அம்மக்களை தங்கள் பக்கத்துக்கே வந்துவிடும்படி கூறினார்கள். அவ்வாறு வந்தால் ஏதாவது செய்துவிடுவோமோ என்று பயப்படாதீர்கள். ஒன்றும் செய்யமாட்டோம். புனை (உத்திரவாதம்) கொடுக்கிறோம் என்று ஓலை அனுப்பினார்கள். ஆனால் அம்மூன்று மக்களும் ஓலையை மறுத்து திருப்பி அனுப்பிவிட்டார்கள். "பகைதேடி வெறுப்பான பேருடனே கூடி எங்களுக்குப் பகையாயினார்கள்" ஆதலால் அவர்களை சமுதாயத்தைவிட்டு புறக்கடித்தார்கள். தங்கள் நாட்டு எல்லைக்குள் வந்தால் வெட்டிப்போடுவதாகவும் தீர்மானித்தார்கள். மேலும் சில தீர்மானங்கள் எடுத்தார்கள். அவற்றில் சில அதிசயமான முடிவுகளாகும். உதாரணமாக அவர்களைப் பெண்டிழந்தான் கூட்டத்தில் ஒன்றாகப் புறக்கடித்தார்கள். அவர்களுடன் தொடர்பு கொண்டவர்களை கொள்வதோடல்லாமல் அவர்கள் பெண்டுகளை மூக்கும் முலையும் வெட்டிப்போடுவதாக முடிவெடுத்தார்கள். அவர்களிடம் பெண்டுகளாகப் போன பெண்களையும் அவ்வாறே செய்வதாக முடிவெடுத்தார்கள். இவ்வாறு முடிவெடுத்தவர்கள் அந்நாட்டில் வாழ்ந்த அத்தனை ஜாதியார்களையும், அந்த ஜாதிகள் என்னென்ன என்ற பட்டியலையும் இக்கல்வெட்டுக் கூறுகிறது. இதைக் கூறுமிடத்து "அந்தணன் தலையாக அரிப்பன் கடையாக உள்ளிட்ட அனைத்துச் சாதிகளும்" என்று கூறுகிறது.

இவ்வாறு நாங்கள் செய்யாவிட்டால் இன்னின்ன பாவம் பெறுவோம் என்றும் குறித்துள்ளார்கள். அதில் இரண்டு குறிப்பிடத்தக்கது. (1) அசல் வன்னியர் குதிரைக்குப் புல்லுப் பறிக்கிற பறையர்க்கு எங்கள் பெண்டுகளைக் கொடுத்தோமாகவும் (2) செயங்கொண்ட நாச்சியார் கோயிலில் செவ்வாய்க் கிழமையில் பட்ட ஆடு பட்டபாடுபடுவோம் என்று கூறினார்கள். இந்த முடிவை செயங்கொண்ட நாச்சியார் கோயிலில் செவ்வாய்க் கிழமையன்று ஆடு வெட்டி பின்னர் 'நிலைமை' செய்து கொடுத்தார்கள் என்று கல்வெட்டுக் கூறுகிறது.

இந்தக் கல்வெட்டு செங்கம் கோயிலில் இருக்கிறது.

118 of S. I. I. Vol VII.

கல்வெட்டு

ஸூஸ்ரீ சாகப்தம் ஆயிரத்து ஒருநூற்று என்பதின்மேல் செல்லா நின்ற ஸிம்ஹநாயற்று அபரபக்ஷத்து திருதியையும் நாயற்றுக் கிழமையும் பெற்ற ரேவதிநாள்

ஆடையூர் நாட்டு எலியற்றுக்கு மேற்கும் நம் . . . . . க்கு உள்ளுப் பட்ட நாடும் மலையும் அடிவாரமும்

தென்கரைநாடு மூவரைவென்ற நல்லூற்க்கு மேற்கு சிற்றிங்கைக் குக் கிழக்கு உட்பட்ட நாடும் மலையு முட்பட்ட நாடும்

இந்த இரண்டுகரை நாட்டுக்கு உள்ளுப்பட்ட நாட்டவரும் நாட்டு நாயகஞ் செய்வார்களும் மன்றுடுவார்களும் பிள்ளைமுதலிகளும் தனி யாட்களும் படைநாயகஞ் செய்வார்களும் தனியாள் முதலிகளும் . . ம்பனுயகரு . . . . . விகளும் கூலிச்சேவகரும் கொந்தவிச்சாதிரரும் நவிரமலைத்தென்பற்று நாட்டவரும் நாட்டுமுதலிகளும் வடமலைநாட்ட வரும் நாட்டுமுதலிகளும் முள்ளுப்பட்ட பலசனத்தோமும் அடி வாரத்து மலையாளரும் மலையாள முதலிகளும் முதுநிர் மலையாளரும் மலையரண் முதலிகளும் செட்டிகளும் வாணிகரும் சணக்கரும் கருமப் பெரும் பன்ஞட்டவரும் பன்ஞட்டு முதலிகளும் பொற்கொற்ற கைக்கோளரும் ஆண்டார்களும் சிவப் பிராம்மணரும் மன்றுடிகளும் முவச்சரும் தென்கரைநாட்டு வடதலை நாட்டவரும் தென்மலைநாட்டா ரும் உட்பட்ட நாட்டவரும் தெல்ல . . . . . புலவரும் பண்ணு வாரும் நியாயத்தாரும் பன்னிரண்டு பணிமக்களு முள்ளிட்ட பெரும் வேடரும் பாணரும் பறையரும் பறைமுதலிகளும் செக்கிலியரும் இருளருமுள்ளிட்ட அனைத்துச்சாதிகளும்

அந்தணன் தலையாக அரிப்பன் கடையாக உள்ளுப்பட்ட அனைத் துச்சாதி மாற்கு

தெ . . . ல்லாரும் . . . . . ணம் பண்ணினபடியாவது

எங்கனுயஞ ராமட்டன் கரிகாலச்சொழ ஆடையூர்நாடாழ்வார் திருவிராச் சியப் பண்ணி எருந்தருளி இருக்க

இவர் ஏவி அருளினபடியெ இவர்கள் திருத்தப்பியார் நாயஞர் நரசிங்க பன்மர் செய்து எழுந்தருளியிருக்க

நாயஞர் நரசிங்கன்மர் மகன் பெரியுடையானும் இவன் தம்பி அரசக ணுயனும் கருப்பக்கட்டி நாயக்கருடனே கூடி எங்கள் நாயன்மாற்கும் எங்களுக்கும் பகைதேடிக் கிழற்றும்போயிருக்க

இவர்கள் செய்த பிழையும் பொறுத்து இவர்கள் கூச்சந் திர்த்துத் திரு வெழுத்துச் சாத்தின திருமுகமும் குடுத்துச் செட்டிபுணைபட்டு அமைத்துவிட்ட இடத்து திருமுகமு மறுத்து எங்கள் நாயன்மாற்கு

ம் எங்களுக்கும் பகைதேடி வெறுப்பானபேருடனே கூடி எங்களுக்குப் பகையாகையிஞலும்

இவர்கள் பிரிதிகங்கர் வழியிலுள்ள பேராகையாலும் இப்பெரியுடையா நும் அரசகஞயனும் இவர்கள்தம்பி அமட்டாழ்வானும் எங்கள் நாயன்மாற்கு இராசத் துரோகிகளும் நாட்டுத் துரோகிகளுமாய் இவர்கள் மூவரையும் பெண்டிழந்தான் கூட்டத்தில் ஒன்ருகப் புறக்கடித்தோம்

பிரிதிகங்கர் மக்கள் எங்கள் நாயன்மாற்குப் புகுந்த நம்பிராட்டியார் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளை அரசுக்(கு)க் கொள்ளக் கடவதல்லவாகவும்

அல்லாத பிள்ளைகள் பூர்வர்முறையிலே இராச்சியம் பண்ணக்கடவர்களாகவும்

இம்மண்ணும் மலையு முள்ளதனையும் எங்கள் மக்கள் மக்கள் வழிவழி இப்பெரியுடையானையும் அரசகஞயனையும் இவர்கடப்பி அமட்டாழ்வாரையும் இவர்கள் மக்களில் வழிவழி ஒருத்தரையும் இம்மண்ணில் புகுதலட்டோம்

இவர்களுக்கு இடங்குடுப்பதுஞ் செய்யோம்

இடங்குடுப்பாரோடு கூடுவதுஞ்செய்யோம்

இவர்கள் மூவரும் இம்மண்ணுக்கு உரியரென்று சொல்லுதல் சொல்லுவர்க்கு இடங்குடுக்கச்செய்யக்கடவோமு மல்லோம்

இவர்களுக்குக் கிழோலை விடுதல் இவர்களைக் காத்தல் இவர்கள. . . சருடன் பேசுதல் செய்தாருண்டாகில் இராசத்துரோகிகளுமாக்கி நாயிலும் பன்றியிலும் கடையாக குத்த நாக்கக் கட[வோமா]கவும்

இவர்கள் பெண்டுகளை முக்கு முலையு மறுத்துவிடக் கடவோமாகவும்

இவர்கள் பக்கல் பெண்டுகள் பொனவள் குடியாக இப்படி ஆகச் செய்ய கடவொமாகவும்

இவர்கள் பக்கல் போனபேரைப் பணிசெய்யுமக்களை இட்டுக் கொன்று போடக்கடவோமாகவும்

இப்படிக்கு நாங்களனைவரும் புண ஓலைப்படியும் நந்திமங்கலமும் உள்ளுப்பட்ட இந்த அனைத்துங் . . . . . . இப்ப நிலைமைக .... ள் மாணமிட்டொம்

இப்படி அற்றுமறவும் செய்திலோமாகில் வல்வரையன் சத்தியம் தங்களம்மைக்குத் தானே மிணளன்

அசலவன்னியர் குதிரைக்குப் புல்லுப் பறிக்கிற பறையற்கு எங்கள் பெண்டுகளைக் குடுத்தோமாகவும்


இந்த ஓலைப்படிக்குத் தப்பினருண்டாகில் செயங்கொண்ட நாச்சியார் கோயிலில் செவ்வாய்க்கிழமையில் பட்டஆடுபட்டது படக்கடவோமாக

செயங்கொண்ட நாச்சியார் திரி . . . தமிட்டுச் சிங்கநாயற்று இருபத்து மூன்றுந் தியதியான பஞ்சமியும் கதியும் பெற்ற செவ்வாய்க்கிழமை நாள்

ஆடுவெட்டிப் பூதமுதைத்து நிலைமை பண்ணி இப்படிக்குத் திரு இடவந்துறை நாயனர் கோயிலிலெ கல்லும் வெட்டிக் குடுத்தோம் இவ்வனைவொம்

இக்கல்வெட்டினபடிக்குத் தப்பினவன் கெங்கை குமரியிடைக் குராற்பசுக் குத்தினவன் பாவங்கொள்வான்

இப்படிக்கு இவனைத்து நாட்டவரும் பணிக்கக் கல்லுவெட் . . . . . . ய நாட்டாசாரியனென் இவை என்னெழுத்து



மீனாக்ஷி திருக்கல்யாணம்; அங்கயற்கண்ணி ஆலயம்; மதுரை; ராணி மங்கம்மாள் பணி; கி.பி. 18-ஆம் நூற்றாண்டு.

# மாற்பிடுகு பெருங்கிணறு

வெ. வேதாசலம், M.A., Dip. Epy. & Arch.
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத் துறை.

திருச்சி மாவட்டத்து திருவெள்ளறையில் பல்லவர் காலத்துப் பழைய கிணறு ஒன்று உள்ளது. இவ்வூரின் நடுநாயகமாக உள்ள புண்டரீகாட்சப் பெருமாள் கோயிலின் தென்மேற்கு மூலையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. வைணவர்கள் இதனைச் 'சக்கரதீர்த்தம்' என்கின்றனர். ஊரார் 'நாலுமூலைக்கேணி' 'மாமியார் மருமகள் குளம்' என்றழைக்கின்றனர். இதன் மீது பல்லவ மன்னன் தந்திவர்மன் காலத்துக் கல்வெட்டு ஒன்றும், பாடல் கல்வெட்டு ஒன்றும், ஹொய்சள வீரராமநாதன் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றன. இதன் வடிவம் புதுமையாக இருப்பது இதன் சிறப்புகளில் ஒன்றாகும். தமிழ் நாட்டில் பல்லவர் கல்வெட்டுடைய பழமையான சிற்பங்களோடும் குன்றாத சிறப்போடும் இன்றும் உள்ள கிணறு இது ஒன்றேயாகும்.

## தோற்றுவித்தோன்

இவ்வூர் சிவன் கோயிலில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் வரும் 'மாற்பிடுகு இளங்கோ வேளான் சாத்தன்' என்பவனே இக்கிணற்றினைத் தோற்றுவித்தான் என்பாரும் உளர். இது மாற்பிடுகு என்ற பெயரின் ஒப்புமை மயக்கத்தால் ஏற்பட்ட தவறாகும். இக்கிணற்றிலுள்ள தந்திவர்மனின் 5-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு இதை எடுத்தவன் ஆலம்பாக்கத்து விசையநல்லூழான் கர்பி கம்பன் அரையன் என்று தெளிவாகத் தெரிவிக்கிறது. 'இதன் பெயர் மார்ப்பிடுகு பெருங்கிணறு தந்திவர்மனின் நாலாவது ஆட்சியாண்டில் தொடங்கி ஐந்தாவது ஆட்சியாண்டில் முற்றுவித்தான் ஆலம்பாக்கத்து விசயநல்லூழான் தம்பி கம்பன் அரையன்' என்பது கல்வெட்டுப் பகுதியாகும்.

இக்கிணற்றினைத் தொட்ட கர்பன் அரையன் யார்? அவன் எக்குலத்தைச் சார்ந்தவன் என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. கம்பன் அரையனின் அண்ணன் ஆலம்பாக்கத்து விசைய நல்லூழான் என்று கல்வெட்டு குறிப்பிடுவதால் இவன் ஆலம்பாக்கத்தைச் சார்ந்தவனாக இருக்க வேண்டும். ஆலம்பாக்கத்து விசையநல்லூழான் இரண்டாம் நந்திவர்மனின் காலத்தில் சிறந்த அரசியல் அதிகாரியாக விளங்கியவன். நந்திவர்மனின் 61-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட பட்டத்தாள்மங்கலச் செப்பேட்டில் அக்கொடையை நிறைவேற்றிய ஆணத்தியாகக் குறிப்பிடப்படுகிறான். இவன் தம்பி கம்பன்

அரையனும் தந்திவர்மன் காலத்தில் உயர்ந்த அரசியல் அதிகாரியாக விளங்கியிருக்க வேண்டும். கம்பன் என்பது இயற்பெயராகவும் அரையன் என்பது பட்டப் பெயராகவும் இருக்க வேண்டும்.

## கிணற்றின் பெயர்

'இக்கிணற்றின் பெயர் மார்ப்பிடுகு பெருங்கிணறு என்பது' என்று இக்கிணற்றிலுள்ள தந்திவர்மன் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

மாற்பிடுகு என்ற பட்டமோ வரலாற்றில் சில இடங்களுக்கும், சில பெயர்களுக்கும் அடைமொழியாக சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. ஆலம்பாக்கத்திலுள்ள ஏரி ஒன்று 'மாற்பிடுகு ஏரி' என்று தந்திவர்மன் காலத்தில் அழைக்கப்பட்டது. முதல் இராசராசனின் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு 'ராசேந்திரசிம்ம வளநாட்டுத் திருவாலிநாட்டு மாற்பிடுகு தேவிச் சதுர்வேதிமங்கலம்' என்ற ஊரினைக் குறிப்பிடுகிறது. புண்ணியகுமரன் என்ற தெலுங்குச் சோழன் 'மாற்பிடுகு' என்ற பட்டத்தினைப் புனைந்து விளங்கியிருக்கிறான். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இருவர்தான் இப்பட்டத்தைப் புனைந்து விளங்கியிருக்கின்றனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இருவரும் முத்தரையர்களே. ஒருவன் குன்றாண்டார் கோயிலில் தந்திவர்மனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிக்கப்படும் 'மாற்பிடுகு பேரரையன்'; மற்றொருவன் திருவெள்ளறை சிவன் கோயிலில் மூன்றும் தந்திவர்மனின் 6-ஆம் ஆட்சியாண்டில் குறிக்கப்பெறும் 'மாற்பிடுகு இளங்கோ வேளான் சாத்தன்'. தந்திவர்மனுக்கு மாற்பிடுகு என்ற பட்டப் பெயர் இருந்தமைக்கு நேர்முகக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லை. 'மாற்பிடுகு' என்னும் பட்டம் தந்திவர்மனுக்கு இருந்திருக்கலாம். தந்திவர்மன் பெயராலோ அல்லது அவன் காலத்தில் வாழ்ந்த 'மாற்பிடுகு பேரரையன்' பெயராலோ இக்கிணறும் ஆலம்பாக்கத்து 'மாற்பிடுகு ஏரியும்' தோற்றுவிக்கப்பட்டன எனக் கொள்ளலாம்.

திருவெள்ளறைக்கும் முத்தரையர்க்கும் தொடர்பு இருந்திருக்கிறது. செந்தலையில் 'வெள்ளறைவாய்க்கால்' என்ற வாய்க்கால் ஓடியிருந்தது. செந்தலை முத்தரையர் தலைவனை குவாவன்மாறனை நினைவூட்டும் வகையில் வெள்ளறைச் சிவன் கோயில் கல்வெட்டில் 'குவாவன்சேந்தன்' என்ற ஒருவன் காணப்படுகிறான். 'மாற்பிடுகு இளங்கோ வேளான் சாத்தன்' என்ற ஒருவனும் இக்கோயில் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறான். இன்றும் வெள்ளறையின் சுற்றூர்களான திருப்பாளையம், காட்டுக்குளம், காலவாய்ப்பட்டி முதலியவற்றிலும் இம்மக்களே அதிகம் வாழ்கின்றனர்.

## நன்றிக்கடன்

கம்பன் அரையன் அனைவருக்கும் பெருமைதந்து இக்கிணற்றினை எடுப்பித்துள்ளான். தன் தலைவன் பெயரால் இக்கிணற்றுக்குப் பெயரிட்-

டிருக்கிறான். கல்வெட்டில் ஆலம்பாக்கத்து விசையநல்லூழான் தம்பி கம்பன் அரையன் என்று தன் முன்னோன் பெயரையும் கல்வெட்டில் சேர்த்துள்ளான். எல்லாவற்றிற்கும் மேலாக தந்திவர்மன் உருவத்தை இக்கிணற்றின் கீழ்புறத்தின் மேலேயுள்ள சிற்பத்தொகுதியில் எடுப்பித்திருக்கிறான்.

### தந்திவர்மனின் உருவம்

இச்சிற்பத் தொகுதியை மேலோட்டமாகக் கண்டவர்கள் நரசிம்மர் நடுவே வீற்றிருக்க, வடபுறம் பிரமனும், தென்புறம் சிவனும் அமர்ந்திருக்கின்றனர்; இருபுறமும் சூரிய சந்திரர்கள் பறந்துவரும் காட்சி செதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுவர். இச்சிற்பங்களை ஆழ்ந்து நோக்கினால் கீழ்புறம் உள்ள உருவம் சிவன் இல்லை என்பது புலனாகும். இரண்டு கரங்களோடு வலக்கரத்தால் நரசிங்கமூர்த்தியைப் பரவிக் கொண்டிருக்கும் அவ்வுருவம் தந்திவர்மனாக இருக்கலாம். அகன்ற மார்பு, தலையில் மணிமுடி, மார்பில் தடித்த யக்ஞோபவீதம் இவையெல்லாம் மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்டிருக்கும் பல்லவமன்னர்களின் வழிவந்த ஒரு பல்லவனையே நினைவூட்டுகின்றன. தந்திவர்மன் சிறந்த வைணவன் ஆதலின் இங்கு நரசிம்மரை பரவிக் கொண்டிருக்கிறான். தந்திவர்மனின் 16-ஆவது ஆட்சியாண்டில் குவாவன் சாத்தன் என்ற முத்தரையர் தலைவன் திருவாலந்தார் மலையைக் குடைந்து திருமாலை எழுந்தருளச் செய்திருக்கிறான். தந்திவர்மன் கச்சி பரமேஸ்வர விண்ணகரத்திற்குப் பொற்குடம் ஒன்றை அளித்திருக்கிறான். திருவெள்ளறைப் பழைய பெருமாள் குடவரையில் கிருஷ்ண - ருக்மிணி உருவங்களைப் பிரதிஷ்டை செய்திருக்கிறான் என்பதை ஈண்டு நினைவு கூர்தல் பொருத்தமானதாகும்.

### கம்பன் அரையன் உருவம்

தந்திவர்மன் இருக்கும் சிற்பத்தொகுதிக்குக் கீழே காணப்படும் கற்பத்தியில் உள்ள உருவங்கள் தெளிவாகத் தெரியாவிடினும் ஓரளவு அடையாளம் கண்டுகொள்ளுமளவில் அமைந்துள்ளன. நடுவில் பெருமிதம் தோன்ற தலைவன் ஒருவன் காணப்படுகிறான். அடுத்து அவனது வடபுறத்தில் பெண்ணொருத்தி தலைசாய்த்து நிற்கிறாள். அவளையடுத்து யானையொன்று நிற்கிறது. தலைவனின் இடப்புறம் குதிரை வீரன் ஒருவன் வலது தோளில் குடம் ஒன்றினைத் தாங்கிக் கொண்டு நிற்கிறான். அவனையடுத்து தென்புறம் குதிரையொன்று நிற்கிறது. நடுவிலுள்ள தலைவனின் உருவம் கம்பன் அரையனின் உருவமாக இருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. அவனது யானை வடபுறத்தில் இருக்கிறது. அவனுக்கு நீராடத் துணைபுரியும் அவனது வீரன் குதிரையுடன் குடத்தை ஏந்திக்கொண்டு நிற்கிறான். வலப்புறமிருப்பது அவனது பணிப் பெண்ணாகவோ மனைவியாகவோ இருக்கலாம். இவ்வுருவங்கள் மன்னனுக்கு மதிப்பளிப்பது போன்று தந்திவர்மன் இருக்கும் கற்பத்திச் சிற்பத்

அரையனும் தந்திவர்மன் காலத்தில் உயர்ந்த அரசியல் அதிகாரியாக விளங்கியிருக்க வேண்டும். கம்பன் என்பது இயற்பெயராகவும் அரையன் என்பது பட்டப் பெயராகவும் இருக்க வேண்டும்.

## கிணற்றின் பெயர்

'இக்கிணற்றின் பெயர் மாற்பிடுகு பெருங்கிணறு' என்று இக்கிணற்றிலுள்ள தந்திவர்மன் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

மாற்பிடுகு என்ற பட்டமோ வரலாற்றில் சில இடங்களுக்கும், சில பெயர்களுக்கும் பட்டமே அடைமொழியாகச் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. ஆலம்பாக்கத்திலுள்ள ஏரி ஒன்று 'மாற்பிடுகு ஏரி' என்று தந்திவர்மன் காலத்தில் அழைக்கப்பட்டது. முதல் இராசராசனின் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு 'ராசேந்திரசிம்ம வளநாட்டுத் திருவாலிநாட்டு மாற்பிடுகு தேவிச் சதுர்வேதிமங்கலம்' என்ற ஊரினைக் குறிப்பிடுகிறது. புண்ணிய குமரன் என்ற தெலுங்குச் சோழன் 'மாற்பிடுகு' என்ற பட்டத்தினைப் புனைந்து விளங்கியிருக்கிறான். தமிழகத்தைப் பொருத்தமட்டில் இருவர்தான் இப்பட்டத்தைப் புனைந்து விளங்கியிருக்கின்றனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இருவரும் முத்தரையர்களே. ஒருவன் குன்றாண்டார் கோயிலில் தந்திவர்மனின் 8-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிக்கப்படும் 'மாற்பிடுகு போதியரையன்'; மற்றொருவன் திருவெள்ளறை சிவன் கோயிலில் மூன்றும் தந்திவர்மனின் 6-ஆம் ஆட்சியாண்டில் குறிக்கப்பெறும் 'மாற்பிடுகு இளங்கோ வேளான் சாத்தன்'. தந்திவர்மனுக்கு மாற்பிடுகு என்ற பட்டப் பெயர் இருந்ததற்கு நேர்முகக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லை. 'மாற்பிடுகு' என்னும் பட்டம் தந்திவர்மனுக்கு இருந்திருக்கலாம். தந்திவர்மன் பெயராலோ அல்லது அவன் காலத்தில் வாழ்ந்த 'மாற்பிடுகு போதியரையன்' பெயராலோ இக்கிணறும் ஆலம்பாக்கத்து 'மாற்பிடுகு ஏரியும்' தோற்றுவிக்கப்பட்டன எனக் கொள்ளலாம்.

திருவெள்ளறைக்கும் முத்தரையர்க்கும் தொடர்பு இருந்திருக்கிறது. செந்தலையில் 'வெள்ளறைவாய்க்கால்' என்ற வாய்க்கால் ஒன்றிருந்தது. செந்தலை முத்தரையர் தலைவனை குவாவன்மாறனை நினைவூட்டும் வகையில் வெள்ளறைச் சிவன் கோயில் கல்வெட்டில் 'குவாவன்சேந்தி' என்ற ஒருவன் காணப்படுகிறான். 'மாற்பிடுகு இளங்கோ வேளான் சாத்தன்' என்ற ஒருவனும் இக்கோயில் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறான். இன்று வெள்ளறையின் சுற்றூர்களான தீராம்பாளையம், காட்டுக்குளம், காலவாய்ப்பட்டி முதலியவற்றிலும் இம்மக்களே அதிகம் வாழ்கின்றனர்.

## நன்றிக்கடன்

கம்பன் அரையன் அனைவருக்கும் பெருமை தந்து இக்கிணற்றினை எடுப்பித்துள்ளான். தன் தலைவன் பெயரால் இக்கிணற்றுக்குப் பெயரிட்

டிருக்கிறான். கல்வெட்டில் ஆலம்பாக்கத்து விசையநல்லூழான் தம்பி கம்பன் அரையன் என்று தன் முன்னோன் பெயரையும் கல்வெட்டில் சேர்த்துள்ளான். எல்லாவற்றிற்கும் மேலாக தந்திவர்மன் உருவத்தை இக்கிணற்றின் கீழ்புறத்தின் மேலேயுள்ள சிற்பத்தொகுதியில் எடுப்பித்திருக்கிறான்.

### தந்திவர்மனின் உருவம்

இச்சிற்பத் தொகுதியை மேலோட்டமாகக் கண்டவர்கள் நரசிம்மர் நடுவே வீற்றிருக்க, வடபுறம் பிரமனும், தென்புறம் சிவனும் அமர்ந்திருக்கின்றனர்; இருபுறமும் சூரிய சந்திரர்கள் பறந்துவரும் காட்சி செதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுவர். இச்சிற்பங்களை ஆழ்ந்து நோக்கினால் கீழ்புறம் உள்ள உருவம் சிவன் இல்லை என்பது புலனாகும். இரண்டு கரங்களோடு வலக்கரத்தால் நரசிங்கமூர்த்தியைப் பரவிக் கொண்டிருக்கும் அவ்வுருவம் தந்திவர்மனாக இருக்கலாம். அகன்ற மார்பு, தலையில் மணிமுடி, மார்பில் தடித்த யக்ஞோபவீதம் இவையெல்லாம் மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்டிருக்கும் பல்லவமன்னர்களின் வழிவந்த ஒரு பல்லவனையே நினைவூட்டுகின்றன. தந்திவர்மன் சிறந்த வைணவன் ஆதலின் இங்கு நரசிம்மரை பரவிக் கொண்டிருக்கிறான். தந்திவர்மனின் 16-ஆவது ஆட்சியாண்டில் குவாவன் சாத்தன் என்ற முத்தரையர் தலைவன் திருவாலந்தூர் மலையைக் குடைந்து திருமாலை எழுந்தருளச் செய்திருக்கிறான். தந்திவர்மன் கச்சி பரமேஸ்வர விண்ணகரத்திற்குப் பொற்குடம் ஒன்றை அளித்திருக்கிறான். திருவெள்ளறைப் பழைய பெருமாள் குடவரையில் கிருஷ்ண ருக்மிணி உருவங்களைப் பிரதிஷ்டை செய்திருக்கிறான் என்பதை ஈண்டு நினைவு கூர்தல் பொருத்தமானதாகும்.

### கம்பன் அரையன் உருவம்

தந்திவர்மன் இருக்கும் சிற்பத்தொகுதிக்குக் கீழே காணப்படும் கற்பத்தியில் உள்ள உருவங்கள் தெளிவாகத் தெரியாவிடினும் ஓரளவு அடையாளம் கண்டுகொள்ளுமளவில் அமைந்துள்ளன. நடுவில் பெருமிதம் தோன்ற தலைவன் ஒருவன் காணப்படுகிறான். அடுத்து அவனது வடபுறத்தில் பெண்ணொருத்தி தலைசாய்ந்து நிற்கிறாள். அவளையடுத்து யானையொன்று நிற்கிறது. தலைவனின் இடப்புறம் குதிரை வீரன் ஒருவன் வலது தோளில் குடம் ஒன்றினைத் தாங்கிக் கொண்டு நிற்கிறான். அவனையடுத்து தென்புறம் குதிரையொன்று நிற்கிறது. நடுவிலுள்ள தலைவனின் உருவம் கம்பன் அரையனின் உருவமாக இருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. அவனது யானை வடபுறத்தில் இருக்கிறது. அவனுக்கு நீராடத் துணைபுரியும் அவனது வீரன் குதிரையுடன் குடத்தை ஏந்திக்கொண்டு நிற்கிறான். வலப்புறமிருப்பது அவனது பணிப் பெண்ணாகவோ மனைவியாகவோ இருக்கலாம். இவ்வுருவங்கள் மன்னனுக்கு மதிப்பளிப்பது போன்று தந்திவர்மன் இருக்கும் கற்பத்திச் சிற்பத்

தொகுதிக்குக் கீழே அமைக்கப்பட்டிருக்கும் பொருத்தத்தையும் இக்கிணற்றில் காணலாம்.

## கிணற்றின் அமைப்பு

இன்று 'ஸ்வஸ்திகா' என்றழைக்கப்படும் வடிவத்தில் இக்கிணற்றின் அமைப்பு காணப்படுகிறது. திட்டமிட்டே சம்பன் அரையன் இவ்வழக்கத்தைத் தேர்ந்தெடுத்து அமைத்திருக்கிறான். இக்கிணறு பண்டைய தமிழகத்துப் பொறியியல் திறத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு.

## ஸ்வஸ்திகம்

இன்றைய நிலையில் இக்கிணற்றில் பக்க அளவுகள் ஒன்றுக்கொன்று ஓரளவுதான் பொருந்திவருகின்றன. ஆரம்பத்தில் இது நன்றாக இருந்து காலப்போக்கில் குலைந்து போயிருக்கலாம். நான்கு பக்கமும் இறங்கிச் செல்வதற்கு ஏறக்குறைய ஐம்பத்திரண்டு படிகள் காணப்படுகின்றன. இப்படிகள் ஒவ்வொன்றின் நீளம் 5 செ மீ. அகலம் 27 செ மீ. கொண்டவையாய்க் காணப்படுகின்றன. வாயிலின் கீழே உள்ள இறங்குபடிகள் எல்லாம் அரை நிலா அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு புறமும் கீழேயுள்ள பத்துப் படிகளுக்குப் பல்லவர் காலத்துத் தமிழ் எண்கள் பத்து வரை இடப்பட்டுள்ளன. ஏனோ இவை பேலும் தொடரவில்லை. வடபக்க வாயிலேயே பத்து எண்கள் முழுமையாக உள்ளன. மற்ற பக்கங்களில் இடையிடையே எண்கள் காணப்படவில்லை. எண்கள் காணாத இப்படிகள் பின்வந்தோரால் மாற்றப்பட்டு கிணறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று எண்ண இடந்தருகிறது. இந்த எண்களில் ஒன்று என்ற எண் 'க' என்ற குறியீட்டால் குறிக்கப்பெறாமல் ÷ என்ற குறியீட்டால் குறிக்கப் பெறுகிறது

கிணற்றின் உள்ளே தரையிலிருந்து சுமார் 15 அடி உயரம் வரை நான்கு புறமும் வாயில்களுக்கு இடைவெளிவிட்டு பக்கச்சுவர்கள் காணப்படுகிறது. அதற்கு மேலே நடந்து செல்வதற்கு ஏற்றாற்போல் சுற்றிலும் 3½ அடி அளவில் நடைபாதை செல்கிறது. நடைபாதைக்கும் மேலே பெரிய சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கிறது. இம்மூன்று பிரிவுக்கும் மேலே சுவற்றின் விளிம்பை அழகான குமுதம் போன்று வடித்த கற்களைக் கொண்டு எடுப்பாக முடித்திருக்கிறார்கள். இந்த 'ஸ்வஸ்திக' அமைப்பில் பக்கங்கள் வலதுபுறம் நோக்கிச் செல்கின்றன. ஒவ்வொரு படிக்கட்டும் முடியும் இடத்திற்கு மேலே பெரிய அளவில் ஒன்றன்மேல் ஒன்றாக இடைவெளி விட்டு மூன்று கல்வட்டங்கள் நிற்கின்றன. இவற்றில் கிணறு எடுக்கப்பட்ட காலத்தில் செதுக்கப்பட்ட சிறிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

## கிழக்கு திசை (மேலிருந்து கீழாக)

கற்பத்தி ஒன்று: நடுவே யோகநரசிம்ம மூர்த்தி; அவரது தென்

புறம் நந்திவர்மன்? வடபுறம் பிரம்மா, இவர்களையடுத்து இருபுறமும் சூரியன; சந்திரன்; அவர்களையடுத்து இரண்டு சிம்மங்கள் தென்புறம், வடபுறம் திரும்பிக்கொண்டு நிற்கின்றன.

கற்பந்தி இரண்டு நடுவில் தலைவன் (கம்பன் அரையனா?) அவனது தென்புறம் வலது தோளில் குடத்தை வைத்துக்கொண்டு வீரன் ஒருவன் நிற்கிறான்; அவனது இடதுபுறம் குதிரை ஒன்று காணப்படு கிறது. வடபுறம் பெண்ணொருத்தியும் யானை ஒன்றும் நிற்கின்றனர்.

## மேற்கு திசை

கற்பத்தி ஒன்று: நடுவில் எருது உருவில் வந்த அரக்கனை வீழ்த்தும் கண்ணன், தென்புறம் அவன் குதிரை அரக்கனை வீழ்த்தும் காட்சி. வடபுறம் கொக்கின் வாயைப் பிளக்கும் காட்சி; இருபுறமும் பக்கத்திற்கொன்றாக வடபுறமும் தென்புறமுமாக இரண்டு சிம்மங்கள் திரும்பிக்கொண்டு நிற்கின்றன.

கற்பத்தி இரண்டு: நடுவே திருமால், ஸ்ரீதேவி வலப்புறம், பூதேவி இடப்புறம் காணப்படுகின்றனர். இருபுறமும் பக்கத்திற்கொரு வராக இரண்டு முனிவர்கள் அமர்ந்திருக்கின்றனர். அவர்களை அடுத்து இருபுறமும் சூரியனும் சந்திரனும் பறந்து வருகின்றனர்.

## தெற்கு திசை

கற்பத்தி ஒன்று: வீரபத்திரர், பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, விநாயகர், முதலியோர் வரிசையாக அமர்ந்திருக்கின்றனர்.

கற்பந்தி இரண்டு: நடுவே துர்க்கை நிற்கிறாள். மேல்புறம் உள்ள பக்தன் வணங்கிக்கொண்டும்; கீழ்புறம் உள்ள பக்தன் தலையை அரிந்துகொண்டும் இருக்கின்றனர். உருவங்கள் பாசி பிடித்திருப்பதால் நன்றாகத் தெரியவில்லை. தேவியின் கீழ்புறம் மானின் மீது ஒரு பெண் ணும், மேல்புறம சிம்மத்தின் மீது ஒரு பெண்ணும் தேவியைப் பரவிக் கொண்டிருக்கிறார்கள்.

## வடக்கு திசை

கற்பத்தி ஒன்று: நடுவில் உமாசகிதர், இடப்புறம் இவர்களை மண்டியிட்டு ஒரு பெண் வணங்குகிறாள். இருபுறமும் சூரியன், சந்திரன் பறந்து வருகிறார்கள். இவர்களையடுத்து பக்கத்திற்கொன்றாக இரண்டு எருதுகள் மேற்புறம், கீழ்புறம் நோக்கித் திரும்பிக்கொண்டு இருக் கின்றன.

கற்பத்தி இரண்டு: நடுவே தட்சிணாமூர்த்தி, இருபுறமும்

பக்கத்திற்கிருவராக நான்கு முனிவர்கள் அமர்ந்திருக்கிருர்கள். இதையடுத்து இருபுறமும் சூரியனும் சந்திரனும் பறந்து வருகிருர்கள்.

எல்லாப்பக்கத்திலுமுள்ள மூன்ருவது கற்பத்திகள் மிகுந்த பாசியால் பற்றப்பட்டுள்ளன. அவற்றில் என்ன உருவங்கள் இருந்தன என்று தெரியவில்லை. தெற்குத் திசையிலுள்ள கற்பத்தியில் மட்டும் கொஞ்சம் சித்திரவேலைப்பாடுகள் வெளியே தெரிகின்றன. இதைக் கொண்டு எல்லாப் பக்கத்தின் மூன்ருவது கற்பத்தியிலும் பல்லவர் காலத்துத் திருவாசியை அமைத்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

**வாயில்கள்**

கிணற்றுக்குள் இறங்க எல்லா வாயில்களின் பக்கங்களிலும் இருபுறமும் இரண்டிரண்டாக நான்கு வாயில்களிலும் எட்டு உருவங்கள் காணப்படுகின்றன. இவற்றின் உருவங்கள் தேய்ந்து சிதைந்து காணப்படுகின்றன. எமன், நிருருதி, வருணன், வாயு, சோமன் அல்லது குபேரன், ஈசானன், இந்திரன், அக்கினி என்ற எட்டுத்திசைக் காவலர்களது உருவங்களாக இவை இருக்கலாம்.

**கல்வெட்டுகள்**

கிணற்றின் மேல்புறம் விளிம்பில் தந்திவர்மனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 801) கல்வெட்டு உள்ளது. ஆலம்பாக்கத்து விசைய நல்லூழான் தம்பி கம்பன் அரையன் இக்கிணற்றினைப் பரதுவாஜ கோத்திரத்தின் வழிவந்த பல்லவ திலக அரசனை தந்திவர்மனின் 4-ஆவது ஆட்சியாண்டில் தொடங்கி 5-ஆம் ஆட்சியாண்டில் முடித்தான். இதன் பெயர் மார்ப்பிடுகுப் பெருங்கிணறு. ஊரின் தென்பகுதியிலுள்ள இத் தென்னூர்ப் பெருங்கிணற்றினை இரச்சிப்பார், 'இவ்வூர் மூவாயிரத்து எழுநூற்றுவர்' என்று இது குறிப்பிடப்படுகிறது.

கிணற்றின் கீழ்புறம் ஹொய்சள வீரராமநாதனின் 25-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் காணப்படுகிறது. திருவெள்ளறை மகாகிராமத்தின் தெற்கு வாசலில் உள்ள இக்குளம் வெள்ளத்தினால் சீர்குலைந்தது. குடந்தை வாணிகன் கோன் ஊரான் உய்யநெறி காட்டினான் நகரத்தார் பக்கல் பணம் பெற்று இக்குளத்தினைத் திருத்தியமைத்தான் என்று இக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

மூன்ருவதாக மேல்புறம் உள்ள கல்வெட்டு மிகவும் அழகிய பாடலாகக் காணப்படுகிறது.

ஸ்ரீ கண்டார் காணு வுலகத்தே காதல் செய்து நில்லாதேய்
பண்டேய் பரமன் படைத்தநாள் பார்த்து நின்று நையாதேய்
தண்டார் மூப்புவந்துன்னைத் தளரச்செய்து நில்லாமுன்
உண்டேல் உண்டுமிக்கது உலகம்மறிய வைம்மினேய்

இப்பாடலைப் படிக்கும்போது சமணர்களுடைய நாலடியார் பாடல் ஒன்றினைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது என்பர்.


'முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கும் நோயுள-கொன்னே
பரவுமின் பற்றறமின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து'.

'வாழ்நாள்-உலவாமுன் ஒப்புர வாற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல்'
'புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை'

'அன்றறிவாம் என்னாது அறம் செய்க' என்ற குறளில் வள்ளுவர் ஒற்றை அடியில் வார்த்துத்தந்த கருத்தை இப்பாடலாசிரியன்-யாரோ தெரியவில்லை-நான்கடியில் விரித்துத் தந்திருக்கிறான். இப்பாடலின் தொடக்கத்திலுள்ள ஸ்ரீ என்பதை மங்களச் சொல்லாகக் கருதி ஒதுக்கிவிட்டு, இப்போதுதான் கண்டோமே அதற்குள் மறைந்து விட்டதே என்று பேசும்படியான நிலைமைமிக்க இக்கண்டார் காணவுலகத்தின்கண் பற்றுகொண்டு நில்லாமல், உனக்காக பரமன் விதித்த முடிவு நாட்களில் அறம் செய்து கொள்வோமே என்று நில்லாமல், இறுதிக்காலத்தில் தண்டூன்றித் தவிக்கச் செய்யும் தள்ளாமை மிக்க காலமும் வந்து எதுவும் செய்ய இயலாது தளர்ந்துபோய் நில்லாமல், உன்னிடம் இருக்குமானால் அதை ஒழுங்காகத் துய்த்துவிட்டு எஞ்சியதை இவ்வுலகம் அறியும்படி அறங்களில் போட்டு வையுங்கள்' என்பதை இப்பாடலின் திரண்ட பொருளாகக் கூறலாம்.

பல்லவர்காலத்து எழுத்தமைதியைக் கொண்ட இப்பாடல் 'மாற்பிடுகுப் பெருங்கிணறு' தோற்றுவித்த காலத்திலேயே பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். கம்பன் அரையன் தான்மட்டும் கேணிதொட்டு அறஞ்செய்ததோடு நில்லாதேய் பிறரையும் அறஞ்செய்யத் தூண்டி இப்பாடலை இக்கிணற்றில் பொறித்துச் சென்றிருக்க வேண்டும். இக்கிணற்றினைப்போல ஸ்வஸ்திக வடிவத்தில் திருவெள்ளறை உடையார் குளத்திற்குத் தென் கிழக்கே நாயக்கர் காலத்தில் ஒரு கிணற்றினைப் பிற்காலத்தோர் எடுத்திருக்கின்றனர். இதில் கல்வெட்டு இல்லை. முன்னதின் சிறப்பில்லை; என்றாலும் கம்பன் அரையன் நினைத்து பொறித்த பாடலின் விளைவே என இதனைக் கூறலாம்.

இம்மாற்பிடுகு பெருங்கிணறு சீருடன் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் தற்பொழுது பழம் சின்னமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.



தந்தசிற்பம்; திருவரங்கம்; திருமலைநாயக்கர் காலம்; கி.பி. 17-ஆம்

